# தமிழ்ச்சொல் விளக்கம்



- ரகர றகர வேறுபாடு
- லகர ழகர ளகர வேறுபாடு
- நகர னகர ணகர வேறுபாடு
- பெயர் வினை வேறுபாடு
- எதிரிடை மொழிகள்

முல்லை பிஎல். முத்தையா

# தமிழ்ச் சொல் விளக்கம்

- ரகர றகர வேறுபாடு
- லகர ழகர வேறுபாடு
- ணகர னகர வேறுபாடு
- பெயர்வினை வேறுபாடு
- எதிரிடைச் சொற்கள்

முல்லை பி.எல். முத்தையா

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு, சென்னை—40.
போன்: 26163596, 24715968

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட் 2004 |
| நூற்பெயர் | : | தமிழ்ச் சொல் விளக்கம் |
| ஆசிரியர் | : | முல்லை பி.எல். முத்தையா |
| பக்கங்கள் | : | 96 |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | தமிழ்ச் சொல் வேறுபாடுகள் |
| தாள் | : | 10.5 Kg. AS Pvm |
| அச்சு | : | 12 Pt. |
| அச்சிட்டோர் | : | ஜியான் பிரிண்டர்ஸ்<br>சென்னை – 28. |

**விலை ரூ: 25. 00**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ரகர றகர வேறுபாடு | .... | 5 |
| லகர ழகர ளகர வேறுபாடு | .... | 18 |
| னகர நகர ணகர வேறுபாடு | .... | 34 |
| பெயர்வினை வேறுபாடு | .... | 40 |
| எதிரிடைச் சொற்கள் | .... | 53 |
| ஆண்பால், பெண்பால் பெயர்கள் | .... | 59 |
| மரபு வழுக்களும் மரபு வழா நிலைகளும் | .... | 64 |
| போலி | .... | 65 |
| பல்வகைச் சொற்புணர்ச்சிகள் | .... | 67 |
| ஒருமை பன்மைப் பெயர்கள் | .... | 78 |
| வடசொல் தமிழ்ச் சொல்லாகத் திரியும் வகை | .... | 81 |
| தன்வினை பிறவினையாகும் வகை | .... | 82 |
| வல்லெழுத்துக்கள் மிகும் இடங்கள் | .... | 86 |
| வல்லெழுத்துக்கள் மிகா இடங்கள் | .... | 91 |
| இணைமொழிச் சொற்கள் | .... | 94 |

# முன்னுரை

தமிழில் எழுதும் போது நேரும் பிழைகள் பெரும்பாலும் ரகர றகரங்களிலும், னகர,நகர, ணகரங்களிலுமே ஏற்படும். எனவே இப்புத்தகம் மாணவர்களுக்கு மட்டும் அன்றி தமிழைப் பிழையின்றி எழுத விரும்பும் ஒவ்வொருவருக்கும் சிறந்த உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தில் இந்நூலை வெளியிடுகிறோம்.

பிஎல். முத்துக்குமரன்

# தமிழ்ச் சொல் விளக்கம்

## 1. ரகர றகர வேறுபாடு

சொல்லில், றகர மெய்யும் ரகர மெய்யும் எவ்வாறு வரும், எவ்வாறு வராது என்று அறிதற்குக் கீழ்வரும் குறிப்புக்கள் உதவியாகும்.

1. றகர மெய் தன் வருக்கத்தோடு (றகர வரியோடு) சேர்ந்து வரும்;

ரகரமெய் தன் வருக்கத்தோடு (ரகர வரியோடு) சேர்ந்து வாராது.

(உதாரணம்) குற்றம், விற்றான், நெற்றி, புற்று.

2. றகரம், னகரமெய்க்குப்பின் வரும்; ரகரம், னகரமெய்க்குப்பின் வாராது.

*(உதாரணம்) குன்றம், தின்றான், பன்றி, கன்று, கொன்றை, சான்றோர்.*

3. றகரமேனும் ரகரமேனும் தமிழ்ச்சொற்களில் முதலெழுத்தாக வருவதில்லை. ரகரத்தை முதலெழுத்தாக உடைய சில வடசொற்கள் தமிழில் வந்து வழங்குவது உண்டு.

*(உதாரணம்) ரங்கன், ராமன், ரோமம்.*

இவற்றை, அரங்கன், இராமன், உரோமம் என, அ இ உ என்னும் மூன்று உயிரெழுத்துக்களுள் ஏற்ற ஒன்றை முதலில் கூட்டி, எழுதுதல் வேண்டும்.

4. றகரமெய் ஒரு சொல்லின் ஈற்றுஎழுத்தாக வராது.

ரகர மெய் ஒரு சொல்லின் ஈற்றுஎழுத்தாக வரும்

*(உதாரணம்) நீர், தேர், பதர், மலர், ஆசிரியர்.*

5. னகரமெய்யை ஈற்றிலுடைய மொழிகளும் லகரமெய்யை ஈற்றிலுடைய மொழிகளும், வல்லெழுத்தை முதலாகவுடைய மொழிகளோடு சேரும்போது, ஈற்று னகர லகர மெய்கள் றகர மெய்யாக மாறும்; ரகரமெய்யாக மாறமாட்டா.

*(உதாரணம்) பொன்+கொல்லன் = பொற்கொல்லன்*
*அவன் + கு = அவற்கு*
*கல் + சட்டி = கற்சட்டி*
*பல்+பொடி = பற்பொடி*

6. றகரமெய்க்குப்பின், க, ச, ப, ற என்னும் இந் நான்கு வருக்க உயிர்மெய்களே வரும்; மற்றவை சேர்ந்து வரமாட்டா.

*(உதாரணம்) நிற்க, முயற்சி, வெற்பு, உற்றார்.*

ரகரமெய்க்குப்பின், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங, என்னும் இப் பத்து வருக்க உயிர்மெய்கள் வரும்; மற்றவை வாரா.

*(உதாரணம்) வேர்கடிது, வேர்சிறிது, வேர்தீது, வேர்நீண்டது, வேர்பெரிது, வேர்மாண்டது, வேர்வலிது, வேர்யாது, வேர்ஞான்றது.*

7. ரகரமெய், தனி உயிர்க்குற்றெழுத்தின் பின்னாவது, தனி உயிர்மெய்க் குற்றெழுத்தின் பின்னாவது நில்லாது. றகர மெய் அவ்வாறு நிற்கும்.

*(உதாரணம்)* *உற்றார், கற்றார்.*

குறிப்பு:– அர்ச்சனை, கர்ப்பம், தர்ப்பை, என்பன வடசொற்கள். அவை, தமிழ் இலக்கண நூற்படி, அருச்சனை, கருப்பம், தருப்பை என்றாகும்.

8. றகர மெய்க்குப்பின் மெய்யெழுத்து வராது; உயிர்மெய் எழுத்தே வரும், ரகர மெய்க்குப்பின் மெய்யும் வரும், உயிர்மெய்யும் வரும்.

*(உதாரணம்)* *(அ) கற்கண்டு, கற்சிலை, சிற்பம்.*
*(ஆ) ஆர்க்கும், அயர்ச்சி, தேர்வு.*

9. றகரம் தமிழ் மொழிக்கே சிறப்பானது. ரகரம் பல மொழிகளுக்கும் பொதுவானது.

*(உதாரணம்)* *பிராமணர் (வடமொழி)*
*அலமாரி (போர்த்துக்கேசியம்)*
*கரம் = சூடு (இந்துஸ்தானி)*
*பிரின்ஸிபால் = தலைவர் (இங்கிலீஷ்)*

10. றகரம் வரப்பெற்ற தமிழ்ச்சொற்கள் அழுத்தமான ஓசையினையுடையனவாய் இருக்கும். ரகரம் வரப்பெற்ற

தமிழ்ச்சொற்கள் வன்மையோசையும் மென்மையோசையும் அல்லாத நடுத்தர ஓசையினை உடையதாக இருக்கும்.

*உதாரணம்:*

*அரு – அருமை*     *அறு – துண்டி*
*அரை – பாதி*     *அறை – அடி*
*இரத்தல் – யாசித்தல்*     *இறத்தல் – சாதல்*
*இரங்கு – மனமிரங்கு*     *இறங்கு – கீழே இறங்கு*

# 1. ரகர றகர வேறுபாடு

## அ

அரம் – ஓர் ஆயுதம்
அரமனை – அரசன் வீடு
அரி – விஷ்ணு, அரி
அரிவை – பெண்
அரு – அருமையான
அருகு – சமீபம்
அருந்து – சாப்பிடு
அருவி – மலையருவி
அரை – பாதி

அலரி – ஒருவகைப் பூ

அறம் – தருமம்
அறமனை – தருமசாலை
அறி – தெரிந்துகொள்
அறிவை – அறிவாய்
அறு – துண்டி
அறுகு – அறுகம்புல்
அறுந்து – அறுபட்டு
அறுவி – அறச்செய்
அறை – வீட்டின் அறை, (கன்னத்தில் ) அறை
அலறி – கதறி

## ஆ

ஆர – நிறைய
ஆரல் – ஒருவகை மீன்
ஆற – தணிய
ஆறல் – தணிதல்

## இ

இர – யாசி
இரகு – ரகு அரசன்
இரங்கு – மனம் இரங்கு
இரத்தல் – பிச்சை எடுத்தல்
இரப்பு – யாசித்தல்
இரவு – இராத்திரி; இரத்தல்
இரு – உட்கார்
இருக்கு – வேதங்களுள்ஒன்று
இருப்பு – நிலைமை,
இரும்பு – இரும்பு
இரை – ஆகாரம்; ஒலி
இற – கட; சாகு
இறகு – பறவையின் இறகு
இறங்கு – கீழிறங்கு
இறத்தல் – சாதல்; கடத்தல்
இறப்பு – சாதல்
இறவு – சாதல்
இறு – ஒடி; வடிகட்டு
இறுக்கு – அழுந்தக்கட்டு
இறுப்பு – குடியிறை
இறும்பு – சிறுமலை
இறை – வரி; அரசன்

## ஈ

ஈர் – இழு
ஈறு – முடிவு

## உ

உரல் – உரலு
உரவு – வலிமை
உரி – மரவுரி; பட்டை
உறல் – அடைதல்
உறவு – சொந்தம்
உறி – பண்டங்கள் வைக்கும் தூக்கு

| | |
|---|---|
| உரிய – உரிமையான; சொந்தமான | உறிய–உறிஞ்ச |
| உரு – உருவம் | உறு – பொருந்து |
| உருக்கு – இளகச்செய் | உறுக்கு – கோபி |
| உருமு – இடி | உறுமு – கர்ச்சி |
| உருவி – நாயுருவி | உறுவி – அடையச்செய் |
| உரை – சொல்; தேய் | உறை – பை |

### ஊ

| | |
|---|---|
| ஊர – நகர; பரவ | ஊற – சுரக்க |

### எ

| | |
|---|---|
| எரி – தீ | எறி – வீசு |

### ஏ

| | |
|---|---|
| ஏரி – பெரிய குளம் | ஏறி – மேல் ஏறி |

### ஒ

| | |
|---|---|
| ஒரு – ஒன்றாகிய | ஒறு – தண்டி |
| ஒருத்தல் – ஆண்யானை | ஒறுத்தல் – கோபித்தல் |

### க

| | |
|---|---|
| கர – ஒளி; கரவருடம் | கற – (பால்) கற |
| கரி – யானை; அடுப்புக்கரி | கறி – கடி; (காய்) கறி |
| கருத்து – எண்ணம் | கறுத்து – கோபித்து |
| கருப்பு – பஞ்சம் | கறுப்பு – கருமைநிறம் |
| கருவல் – கறுப்பானது | கறுவல் – கோபித்தல் |

| | |
|---|---|
| கருவி – ஆயுதம் | கறுவி – கோபித்து |
| கரை – ஓரம்; கரை | கறை – குற்றம்; மாசு |
| கரையான் – கடற்கறையி–லுள்ளவன் | கறையான் – செல் |
| கவர் – அபகரி | கவறு – சூதாடுகருவி |

**கா**

| | |
|---|---|
| காரல் – ஒரு வகை மீன் | காறல்–(கால்+தல்) – (காறி உமிழ்தல்) |
| கார்–மேகம் | காறு–கொழு |

**கி**

| | |
|---|---|
| கிரி–மலை | கிறி–பொய்; வழி |

**கீ**

| | |
|---|---|
| கீரி–ஒரு வகைப் பிராணி | கீறி–கிழித்து |

**கு**

| | |
|---|---|
| குரங்கு–வானரம் | குறங்கு–தொடை |
| குரஞ்சி–ஓர் இராகம் | குறஞ்சி–செம்முள்ளி |
| குரத்தி–தலைவி | குறத்தி– குறிஞ்சி நிலப்பெண் |
| குரம்–குளம்பு | குறம்–குறச்சாதி,குறி |
| குரல்–தொனி | குறள்–ஒருவகைப் பா |
| குரவர்–பெரியோர் | குறவர்–ஒருவகை சாதியினர் |
| குரவை–கூத்து | குறவை–ஒருவகை மீன் |
| குரு–ஆசான் | குறு–குறுகிய |

| | |
|---|---|
| குருகு—நாரை | குறுகு—சமீபி |
| குரை—ஒலி | குறை—குறைவு |

## கூ

| | |
|---|---|
| கூர—நிறைய | கூற—சொல்ல |
| கூரிய—கூர்மையான | கூறிய—சொல்லிய |
| கூரை—வீட்டின் கூரை | கூறை—புடைவை |

## கோ

| | |
|---|---|
| கோரல்—விரும்புதல் | கோறல்—(கொல்+தல்) கொல்லுதல் |

## சா

| | |
|---|---|
| சாரு—சார்ந்திரு, கிளி | சாறு—இரசம் |

## சி

| | |
|---|---|
| சிரை—தலையைச் சிரை | சிறை—காவல் |

## சீ

| | |
|---|---|
| சீரிய—பெருமை பொருந்திய | சீறிய—கோபித்த |

## சு

| | |
|---|---|
| சுரா—கள் | சுறா—ஒருவகை மீன் |
| சுருக்கு—சுருங்கச் செய் | சுறுக்கு—வேகம், விரைவு |

| | |
|---|---|
| சுரை—ஒருவகைக் கொடி | சுறை—கொத்தான் செடி |
| சுவர்—மதில் | சுவறு—வற்று |

## சூ

| | |
|---|---|
| சூரல்—பிரம்பு | சூறல்—(சூல்+தல்) குடைதல் |
| சூரன்—வீரன்,சூரியன் | சூறன்—மூஞ்சுறு |

## செ

| | |
|---|---|
| செரித்தல்—சீரணித்தல் | செறித்தல்—நெருக்குதல் |
| செரு—போர் | செறு—வயல் |

## சே

| | |
|---|---|
| சேரல்—கிட்டல் | சேறல்—(செல்+தல்) செல்லுதல் |

## சொ

| | |
|---|---|
| சொரி—பொழி | சொறி—ஒருவகை நோய் |

## சோ

| | |
|---|---|
| சோர்—தளர் | சோறு—சாதம் |

## த

| | |
|---|---|
| தரி—அணிந்துகொள் | தறி—வெட்டு |
| தரு—விருட்சம் | தறு—இறுக விடு |
| தவர்—தவசிகள் | தவறு—குற்றம் |

**தி**

| | |
|---|---|
| திரம்—நிலை | திறம்—வல்லமை |
| திரை—அலை | திறை—கப்பம் |

**து**

| | |
|---|---|
| துரவு—கிணறு | துறவு—துறத்தல் |
| துரத்தல்—செலுத்துதல் | துறத்தல்—நீக்குதல் |
| துரு—இரும்பில் பிடிக்கும் துரு | துறு—நெருங்கு |
| துருவல்—தேடுதல் | துறுவல்—நெருங்கல் |
| துரை—தலைவன் | துறை—நீர்த்துறை, வழி |

**தூ**

| | |
|---|---|
| தூர்—வண்டல், நிரப்பு | தூறு—பழிச்சொல் |

**தெ**

| | |
|---|---|
| தெரித்தல்—தெரிவித்தல் | தெறித்தல்—துள்ளுதல் |

**தே**

| | |
|---|---|
| தேர—ஆராய | தேற—தெளிய |
| தேர்—ரதம் | தேறு—தெளிவு அடை |

**ந**

| | |
|---|---|
| நரா—பழம் கன்றுதல் | நறா — கள் |
| நருக்கு—நசுக்கு | நறுக்கு—துண்டி |
| நரை—வெண்மயிர் | நறை—வாசனை |

**நி**

| | |
|---|---|
| நிருத்தம்—நடனம் | நிறுத்தம்—நிறுத்துதல் |
| நிரை—வரிசை | நிறை—நிறைவு |

## நீ

நீர்—ஜலம்

நீறு—விபூதி

## நெ

நெரி—நொறுங்கு, தகர்

நெறி—வழி, நீதி

## ப

பரந்த—பரவிய

பரவை—கடல்

பரி—தாங்கு, குதிரை

பரை—பார்வதி

பறந்த—பறந்த(பட்சி)

பறவை—பட்சி

பறி—பிடுங்கு, பொன், பை

பறை—தம்பட்டம்

## பா

பாரை—கடப்பாரை

பாறை—கற்பாறை

## பி

பிரதேசம்—இடம்

பிரை—மோர்ப்பிரை

பிறதேசம்—அந்நிய நாடு

பிறை—இளஞ்சந்திரன்

## பு

புரணி—ஊன்

புரம்—பட்டணம்

புரவு—காத்தல்

புறணி—புறங்கூறல்

புறம்—பக்கம்

புறவு—புறா

## பெ

பெரு—பெரிய

பெறு—அடை

**பே**

| | |
|---|---|
| பேர்—பெயர் | பேறு—புண்ணியம் |

**பொ**

| | |
|---|---|
| பொரி—நெற் பொரி | பொறி—இயந்திரம் |
| பொரித்தல்—பொரியச் செய்தல் | பொறித்தல்—சித்திரம் எழுதுதல் |
| பொரு—சண்டைசெய் | பொறு—பொறுத்துக்கொள் |
| பொருப்பு—மலை | பொறுப்பு—கடமை |

**ம**

| | |
|---|---|
| ரம்—விருட்சம் | மறம்—கோபம், பாவம் |
| ரல்—மரல்மஞ்சி | மறல்—யமன் |
| மரி—சா | மறி—ஆட்டுக்குட்டி |
| மரு—வாசனை | மறு—குற்றம் |
| மருகல்—ஓர் ஊர் | மறுகல்—சுழலல் |
| மருகி—மருமகள் | மறுகி—மயங்கி |
| மருகு—மகர வாழை | மறுகு—நெடுந்தெரு |
| மருவல்—பொருந்துதல் | மறுவல்—கஸ்தூரி மிருகம் |

**மா**

| | |
|---|---|
| மாரி—மழை | மாறி—மாறுத லடைந்து |

**மு**

| | |
|---|---|
| முரி—ஒடி | முறி—தளிர் |
| முருக்கல்—உருக்குதல் | முறுக்கல்—திருகுதல் |

முருக்கு—கலியாண முருக்கமரம் | முறுக்கு—தின்பண்டம், முறுக்கு

**மெ**

மெய்யுரை—உண்மைச்சொல் | மெய்யுறை—கவசம்

**வ**

வருத்தல்—துன்பப்படுத்துதல் | வறுத்தல்—காய்களை வறுத்தல்

வரை—மலை | வறை—துவட்டற்கறி

வர்க்கம்—இனம் | வற்கம்—குதிரைக்கயிறு

**வி**

விரகு—தந்திரம் | விறகு—விறகு

விரலி—நீண்ட விரலினை -யுடையவள் | விறலி—கருத்து வெளிப்பட நடிப்பவள்

விரல்—கைவிரல் | விறல்—வலிமை

விரைத்தல்—விதைத்தல் | விறைத்தல்—மரத்துப்போ

**வீ**

வீரி—காளி | வீறி—ஓங்கி

**வெ**

வெரு—பயம் | வெறு—வெறுப்பு அடை

**வே**

வேர்—மரம் முதலியவற்றின் வேர் | வேறு—பிறிது

# லகர, ழகர, ளகர வேறுபாடு

## அ

| | | |
|---|---|---|
| அலகம் | – | யானைத்திப்பிலி |
| அளகம் | – | பெண்மயிர் |
| அலகு | – | பறவையின் மூக்கு, துடைப்பம் |
| அழகு | – | சிறப்பு |
| அளகு | – | பெண்மயில் |
| அலகை | – | பிசாசம் |
| அளகை | – | அளகாபுரி |
| அலம் | – | கலப்பை |
| அளம் | – | உப்பளம் |
| அலி | – | பேடி |
| அழி | – | கெடு |
| அளி | – | வண்டு,கொடு |
| அலை | – | கடலின் அலை |
| அளை | – | வளை,தயிர் |
| அல் | – | இருள், மதில் |
| அள் | – | அள்ளு |
| அவல் | – | ஓர் உணவு, பள்ளம் |
| அவள் | – | அப்பெண் |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆலம் | – | விஷம் |
| ஆழம் | – | பள்ளம் |
| ஆலி | – | அமுதம் |
| ஆழி | – | கடல் |
| ஆளி | – | ஆள்வோன் |
| ஆள் | – | ஆண்மகன் |
| ஆல் | – | ஆலமரம் |

## இ

| | | |
|---|---|---|
| இலகு | – | இலேசு, ஒளிசெய் |
| இளகு | – | நெகிழ் |
| இழிவு | – | ஈனம், குற்றம் |
| இளிவு | – | நிந்தை |
| இலை | – | தழை |
| இழை | – | நூற்கிற நூல் |
| இளை | – | மெலி,வேலி |

## உ

| | | |
|---|---|---|
| உலம் | – | திரண்டகல் |
| உளம் | – | உள்ளம் |
| உலர்தல் | – | காய்தல், வாடல் |
| உளர்தல் | – | தடவல், சுழலல் |
| உலவு | – | உலாத்து |
| உழவு | – | பயிர்த்தொழில் |
| உளவு | – | வேவு, இரகசியம் |
| உழ | – | பண்படுத்த |

| | | |
|---|---|---|
| உள | – | உள்ளன |
| உழி | – | இடம்; பக்கம் |
| உளி | – | தறிக்குங் கருவி |
| உலுக்கு | – | குலுக்கு; அசை |
| உளுக்கு | – | சுளுக்கு |
| உலை | – | கொல்லனுலை;நீருலை |
| உழை | – | பக்கம்; மான் |
| உளை | – | பிடரிமயிர்; சேறு |
| உல் | – | தேங்காய் உரிக்கும் கரு |
| உள் | – | உட்புறம் |
| உல்கு | – | சுங்கம் |
| உள்கு | – | நினை |
| உல்லம் | – | ஓர் மீன் |
| உள்ளம் | – | மனம் |

## எ

| | | |
|---|---|---|
| எலும்பு | – | எலும்பு |
| எழும்பு | – | உயர் |
| எல் | – | சூரியன்; பகல் |
| எள் | – | ஓர் தானியம்; நிந்தை |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒலி | – | சத்தம் |
| ஒழி | – | நீங்கு |
| ஒளி | – | பிரகாசம்; அறிவு |
| ஒல் | – | முடிவிடம்; ஒலிக்குறிப்பு |
| ஒள் | – | அழகு |

## க

| | | |
|---|---|---|
| கலம் | – | பாத்திரம்; ஓரளவு |
| களம் | – | மிடறு; போர்க்களம்; நெற்களம் |
| கலர் | – | கீழ்மக்கள் |
| களர் | – | களர்நிலம் |
| கலவு | – | கூட்டு |
| களவு | – | திருட்டு |
| கலி | – | ஒலி; வறுமை; ஓர்யுகம் |
| கழி | – | நீக்கு |
| களி | – | மகிழ்ச்சி |
| கலை | – | ஆண்மான்; மேகலை |
| கழை | – | கரும்பு; மூங்கில் |
| களை | – | அயர்வு; அழகு |
| கலைவு | – | குலைவு; பிரிவு |
| களைவு | – | களைதல் |
| கல் | – | கல்லு; மலை |
| கள் | – | மது; வண்டு |
| கல்லல் | – | கல்லுதல் |
| கள்ளல் | – | களவு செய்தல் |
| கல்லி | – | ஆமை; ஊர்க்குருவி |
| கள்ளி | – | ஓர்மரம்; திருடி |
| கல்வி | – | படிப்பு |
| கள்வி | – | திருடி |

## கா

| | | |
|---|---|---|
| காலம் | – | சமயம்; பருவம் |
| காளம் | – | கருமை; நஞ்சு |

| | | |
|---|---|---|
| காலி | – | பசுக்கூட்டம் |
| காளி | – | துர்க்கை |
| காலை | – | விடியற்காலம் |
| காளை | – | எருது; இளையோன் |

## கி

| | | |
|---|---|---|
| கிலி | – | பயம் |
| கிழி | – | கிழிப்பாய் |
| கிளி | – | கிளிப்பிள்ளை |

## கீ

| | | |
|---|---|---|
| கீல் | – | கதவின்கீல் |
| கீழ் | – | கீழே |
| கீள் | – | கௌபீன உடை |

## கு

| | | |
|---|---|---|
| குரல் | – | ஒலி |
| குறள் | – | குறுமை; ஒரு நூல் |
| குலம் | – | வமிசம் |
| குளம் | – | தடாகம்; நெற்றி |
| குழம்பு | – | சேறு; குழம்புக்கறி |
| குளம்பு | – | விலங்கின் குளம்பு |
| குலிசம் | – | வச்சிராயுதம் |
| குளிசம் | – | இரட்சாபந்தனம் |
| குலை | – | கொத்து |
| குழை | – | குண்டலம்; தளிர் இலை |

## கூ

| | | |
|---|---|---|
| கூலம் | – | கடைவீதி; தானியம் |
| கூளம் | – | குப்பை |
| கூலி | – | சம்பளம் |
| கூளி | – | பேய்; பெருங்கழுகு |

## கே

| | | |
|---|---|---|
| கேழ் | – | ஒப்பு; ஒளி; நிறம் |
| கேள் | – | கேட்பாய்; உறவு |
| கேலி | – | பரிகாசம் |
| கேளி | – | மகளிர் விளையாட்டு |

## கொ

| | | |
|---|---|---|
| கொலு | – | நிமிர்ச்சி; சமூகம் |
| கொழு | – | காறு |
| கொளு | – | பாட்டின் கருத்தை விளக்குஞ் சொற்றொடர் |
| கொலை | – | கொல்லுதல் |
| கொளை | – | இசைப்பாட்டு |
| கொல் | – | கொல்லன்;கொல்லு |
| கொள் | – | தானியம்;வாங்கு |
| கொல்லி | – | ஒரு மலை |
| கொள்ளி | – | நெருப்புறுவிறகு |
| கொல்லை | – | தோட்டம் |
| கொள்ளை | – | கொலை;விலை |

## கோ

| | | |
|---|---|---|
| கோலம் | – | அழகு;பன்றி |

கோளம் – உருண்டை
கோலி – இலந்தை
கோழி – கோழி
கோளி – அத்தி;ஆல்
கோல் – அம்பு; ஊன்றுகோல்
கோள் – புறங்கூறல்

## ச

சகலம் – எல்லாம்
சகளம் – உருவத்தோடுகூடியது
சலம் – அசைவு; ஜலம்
சளம் – துன்பம்; மூர்க்கம்
Fலி – மனஞ்சலிப்பாய்
Fளி – கோழை
ƒவலை – மெலிவு
சவளை – வங்கமணல்
சாலிகை – கவசம்
சாளிகை – வண்டு; பணப்பை

## சு

சுல்லி – அடுப்பு
சுள்ளி – சிறுவிறகு

## சூ

சூலி – கருப்பிணி
சூழி – உச்சி
சூளி – ஆண்மயிர்

| | | |
|---|---|---|
| சூலை | – | ஒரு நோய் |
| சூளை | – | செங்கற் சூளை |
| சூல் | – | கர்ப்பம் |
| சூழ் | – | சுற்றுவாய் |
| சூள் | – | ஆணை;சபதம் |

## செ

| | | |
|---|---|---|
| செதில் | – | மரச் செதில் |
| செதிள் | – | மீன் செதிள் |
| செல்லு | – | கழிவு |
| செள்ளு | – | தெள்ளுப்பூச்சி |

## சொ

| | | |
|---|---|---|
| சொல்லல் | – | சொல்லுதல் |
| சொள்ளல் | – | காரியத்தாழ்ச்சி |

## சோ

| | | |
|---|---|---|
| சோலி | – | ஜோலி;காரியம் |
| சோளி | – | பிச்சைக்காரர் பை |

## த

| | | |
|---|---|---|
| தலம் | – | இடம் |
| தளம் | – | சேனை |
| தலை | – | சிரசு |
| தழை | – | இலை |
| தளை | – | விலங்கு; கட்டு |

| | | |
|---|---|---|
| தவலை | – | பெரிய பாத்திரம் |
| தவளை | – | ஓர் விலங்கு |

**தா**

| | | |
|---|---|---|
| தாலம் | – | நா; கூந்தற்பனை |
| தாளம் | – | காலவளவு; ஒருவகை வாத்தியம் |
| தாலி | – | மங்கலநாண் |
| தாழி | – | குடம்; சாடி |
| தாளி | – | பனை |
| தால் | – | தாலாட்டு |
| தாழ் | – | பணிவாய் |
| தாள் | – | கால்; முயற்சி |

**து**

| | | |
|---|---|---|
| துலக்கம் | – | தெளிவு; பிரகாசம் |
| துளக்கம் | – | அசைவு; கலக்கம் |
| துலை | – | ஒப்பு; தராசு |
| துளை | – | துவாரம்; மூங்கில் |

**தொ**

| | | |
|---|---|---|
| தொலி | – | தோல் |
| தொளி | – | சேறு |
| தொலை | – | தூரம் |
| தொளை | – | துவாரம் |
| தொல்லை | – | தொந்தரரை; பழமை |
| தொள்ளை | – | தொளை; மரக்கலம் |

## தோ

| | | |
|---|---|---|
| தோல் | – | சருமம்; யானை |
| தோள் | – | புயம் |
| தோலி | – | ஓர் மீன் |
| தோழி | – | பாங்கி |
| தோளி | – | அவுரி |

## ந

| | | |
|---|---|---|
| நலி | – | வருந்துவாய் |
| நளி | – | குளிர்; நெருக்கம் |
| நல்ல | – | நேர்த்தியான |
| நள்ள | – | சிநேகிக்க |
| நல்லார் | – | நல்லவர்; மாதர் |
| நள்ளார் | – | பகைவர் |

## நா

| | | |
|---|---|---|
| நால் | – | நான்கு |
| நாள் | – | தினம்; புதுமை |

## நீ

| | | |
|---|---|---|
| நீலம் | – | இருள்; நீல நிறம்; கருங்குவளை |
| நீளம் | – | நெடுமை |
| நீலி | – | அவுரி; காளி |
| நீளி | – | நெடியன் |

## நு

| | | |
|---|---|---|
| நுழை | – | நுண்மை; பலகணி |
| நுளை | – | ஈனம் |

## ப

| | | |
|---|---|---|
| பலம் | – | ஓர் எடை |
| பழம் | – | கனி |
| பலபலெனல் | – | விடியற்குறிப்பு |
| பளபளெனல் | – | நிறக்குறிப்பு |
| பலி | – | பூசை; தேவருணவு |
| பழி | – | குற்றம் |
| பலிதம் | – | பயன்படுகை; பலிப்பது |
| பளிதம் | – | கருப்பூரம் |
| பல்லி | – | இடையரூர்; கெவுளி |
| பள்ளி | – | ஒரு சாதி; கோயில்; சிற்றூர்;படுக்கை |
| பல்லு | – | தந்தம் |
| பள்ளு | – | ஒருவகை நூல் |
| பசலை | – | வேறுபட்ட நிறம் |
| பசளை | – | வயலைக் கொடி |

## பா

| | | |
|---|---|---|
| பால் | – | பாலு |
| பாழ் | – | அழிவு |
| பாலம் | – | நெற்றி; பூமி; வாராவதி |
| பாளம் | – | வெடிப்பு; தகட்டு வடிவம் |

| | | |
|---|---|---|
| பாலை | – | பிரிதல்; பாலைநிலம்; பாலைமரம் |
| பாளை | – | தென்னை; கமுகு |
| முதலியவற்றின் பாளை | | |

## பு

| | | |
|---|---|---|
| புலி | – | வேங்கைமரம்; புலி |
| புளி | – | புளிப்பு; புளியமரம் |
| புல் | – | புல்லு; சேர் |
| புள் | – | பறவை;வளையல் |
| புல்லி | – | புறவிதழ்; சேர்ந்து |
| புள்ளி | – | பொறி; மறு;மதிப்பு |
| புழுகு | – | புனுகு |
| புளுகு | – | பொய் |

## பூ

| | | |
|---|---|---|
| பூழை | – | துவாரம்;வாயில் |
| பூளை | – | இலவம் பஞ்சு |

## பொ

| | | |
|---|---|---|
| பொலி | – | தூற்றா நெல் |
| பொழி | – | சொரி |
| பொளி | – | சுத்தியால் அடி |
| பொலிதல் | – | சிறத்தல்; மிகுதல் |
| பொளிதல் | – | கல்கொத்துதல் |
| பொல்லாத | – | தீங்குள்ள |
| பொள்ளாத | – | தொளையிடாத |

## போ

| | | |
|---|---|---|
| போலி | – | ஒன்றனைப்போல்வது |
| போளி | – | ஒருவகை அப்பம் |

## ம

| | | |
|---|---|---|
| மலை | – | பருவதம் |
| மழை | – | மழை; மேகம் |
| மல்லம் | – | கதுப்பு; மற்போர் |
| மள்ளம் | – | வலி |
| மல்லர் | – | மற்போர்செய்வோர் |
| மள்ளர் | – | உழவர்; படைவீரர் |

## மா

| | | |
|---|---|---|
| மாலிகை | – | மாலை; கழுத்தணி |
| மாளிகை | – | மேல்மாடி |
| மாலுதல் | – | மயங்குதல் |
| மாளுதல் | – | இறத்தல் |
| மாலை | – | அந்திப்பொழுது |
| மாழை | – | அழகு; மாமரம் |
| மால் | – | மயக்கம்; திருமால் |
| மாள் | – | அழி |

## மு

| | | |
|---|---|---|
| முழை | – | துடுப்பு; குகை |
| முளை | – | முளை; ஆப்பு |

## மூ

| | | |
|---|---|---|
| மூலி | – | வேர்; வேர் உள்ளது |
| மூழி | – | பெட்டி; மத்து |
| மூளி | – | காதறை; விளிம்பில்லாதது |
| மூலை | – | கோணம் |
| மூழை | – | அகப்பை; துடுப்பு |
| மூளை | – | தலைமூளை; எலும்பு |

## மெ

| | | |
|---|---|---|
| மெல்ல | – | மிருதுவாய்;மென்றுதின்ன |
| மெள்ள | – | மெதுவாய் |

## வ

| | | |
|---|---|---|
| வலம் | – | வலப்பக்கம்;வலிமை |
| வளம் | – | அழகு; செல்வம் |
| வலவன் | – | சமர்த்தன்; தேர்ப்பாகன் |
| வளவன் | – | சோழன் |
| வலி | – | நோவு; வலிமை |
| வழி | – | பாதை; பழமை |
| வளி | – | காற்று |
| வலை | – | மீன்வலை |
| வழை | – | சுரபுன்னை மரம் |
| வளை | – | சங்கு; வளையல் |
| வல் | – | சீக்கிரம்; சூதாடுங்கருவி |
| வள் | – | காது; வார் |
| வல்லி | – | கொடி; பெண் |

| | | |
|---|---|---|
| வள்ளி | – | ஆபரணம்; வள்ளிக்கொடி |
| வல்லூரம் | – | காடு;வயல்; பூங்கொத்து |
| வள்ளூரம் | – | தசை |
| வல்லை | – | விரைவு |
| வள்ளை | – | ஒரு கொடி |

## வா

| | | |
|---|---|---|
| வாலம் | – | வால் |
| வாளம் | – | வளைவு; வாள்;ஓர் மருந்து |
| வாலி | – | இந்திரன் மகனான வானரன் |
| வாழி | – | வாழ்வாயாக |
| வாளி | – | ஒருவகைக் காதணி |
| வாலை | – | இளம்பெண் |
| வாழை | – | வாழைமரம் |
| வாளை | – | ஓர் மீன் |
| வால் | – | வெண்மை; வால் |
| வாழ் | – | வாழ்ந்திரு |
| வாள் | – | வாளாயுதம்; ஒளி |

## வி

| | | |
|---|---|---|
| விலக்கு | – | தவிர் |
| விளக்கு | – | தீபம்; விளங்கச்செய் |
| விலா | – | பழு, விலாவெலும்பு |
| விழா | – | திருவிழா |
| விளா | – | விளமரம் |
| விழி | – | கண் |
| விளி | – | ஓசை; அழைப்பு |

| | | |
|---|---|---|
| விலை | – | கிரயம் |
| விளை | – | உண்டுபண்ணு; கொல்லை |
| வில் | – | தனு;ஒளி |
| விள் | – | பேசு;திற |

## வெ

| | | |
|---|---|---|
| வெல்லம் | – | கரும்பின்கட்டி |
| வெள்ளம் | – | நீர்ப்பெருக்கு |

## வே

| | | |
|---|---|---|
| வேலை | – | கடல்; தொழில் |
| வேளை | – | காலம்; ஒரு பூடு |
| வேல் | – | வேலாயுதம் |
| வேள் | – | முருகக்கடவுள்; மன்மதன் |

*******

# னகர, நகர, ணகர வேறுபாடு

## அ

| | |
|---|---|
| அரன்–சிவன் | அரண்–மதில் |
| அனு–கதுப்பு; பின் | அணு–சிறுமை |
| அனை–ஓர்மீன்;ஒத்த | அணை–சேர் |
| அன்னம்–சாதம் | அண்ணம்–மேல்வாய் |
| அன்னாள்–அவள் | அந்நாள்–அந்தநாள் |

## ஆ

| | |
|---|---|
| ஆனி–ஆனிமாதம்; இடையூறு | ஆணி–இருப்பாணி |
| ஆனை–யானை | ஆணை–சத்தியம் |
| ஆன்–பசு | ஆண்–ஆண்பாற்பொருள் |

## இ

| | |
|---|---|
| இனை–வருந்து | இணை–ஒப்பு; சேர் |
| இதன்–இதனுடைய | இதண்–பரண் |

## உ

| | |
|---|---|
| உன்னி–நினைத்து | உண்ணி–நாயுண்ணி |
| உன்–நினை | உண்–சாப்பிடு |

## ஊ

ஊன்—மாமிசம்

ஊண்—உணவு

## எ

என்—என்னுடைய
என்ன—என்றுசொல்ல
என்னாள்—என் நாள்

எண்—எண்ணு
எண்ண—நினைக்க
எந்நாள்—எந்தநாள்

## ஏ

ஏனம்—பன்றி
ஏனை—ஏனைய; மற்றைய

ஏணம்—மான்
ஏணை—புடவைத்தொட்டில்

## க

கனம்—பாரம்
கனி—பழம்
கனை—கனைப்பாய்
கன்னி—குமாரி

கணம் – கூட்டம்
கணி—வேங்கை மரம்
கணை—அம்பு
கண்ணி—தலையில் அணியும்மாலை

## கா

கானம்—காடு
கான்—காடு

காணம்—பொன்
காண்—பார்

## கு

குனி—வளை; வில்

குணி—ஊமை; வில்

## கோ

| | |
|---|---|
| கோன்—அரசன் | கோண்—வளைவு |

## ச

| | |
|---|---|
| சனம்—ஜனம் | சணம்—க்ஷணம் |

## சா

| | |
|---|---|
| சானம்—பெருங்காயம் | சாணம்—சாணி |

## சு

| | |
|---|---|
| சுனை—நீர்ச்சுனை | சுணை—அபிமானம்;ரோஷம் |
| சுன்னம்—பூஜ்யம் | சுண்ணம்—சுண்ணாம்பு |

## சே

| | |
|---|---|
| சேனம்—பருந்து | சேணம்—கல்லணை;மெத்தை |

## சோ

| | |
|---|---|
| சோனை—விடாமழை | சோணை—சோணாசலம் |

## த

| | |
|---|---|
| தனி—தனிமையான | தணி—தணிவாய்; தணிப்பாய் |
| தன்னம்—அற்பம் | தண்ணம்—மழு |
| தன்னாள்—தனது நாள் | தந்நாள்—தமது நாள் |
| தன்மை—சுபாவம் | தண்மை—குளிர்ச்சி |
| தன்—தன்னுடைய | தண்—குளிர்ச்சி |

## தி

| | |
|---|---|
| தினை—ஒருவகைத்தானியம் | திணை—நிலம்;ஜாதி |
| தின்—சாப்பிடு | திண்—வல்லமை |
| தின்மை—தீமை | திண்மை—வலிமை |

## து

| | |
|---|---|
| துனி—துன்பம் | துணி—வஸ்திரம்;வெட்டு |
| துனை—வேகம் | துணை—சகாயம்;உதவி |

## தூ

| | |
|---|---|
| தூனம்—வருத்தம், அசைவு | தூணம்—தூண் |

## ந

| | |
|---|---|
| நன்னுதல்—நல்லநுதல்; கடித்தல் | நண்ணுதல் – பொருந்துதல் |

## நா

| | |
|---|---|
| நானம்—வாசனை | நாணம்—வெட்கம் |
| நான்—யான் | நாண்—வெட்கம் |

## நு

| | |
|---|---|
| நுனி—முனை | நுணி—நுட்பம் |

## ப

| | |
|---|---|
| பனி—பனி; குளிர்ச்சி | பணி—வேலை; கட்டளை |
| பனை—பனைமரம் | பணை—பெருமை; பருமை |

| | |
|---|---|
| பன்–பேசு | பண்–இசைப்பாட்டு;செய் |
| பன்மை–பன்மைச்சொல் | பண்மை–தகுதி |
| பரன்–மேலானவன் | பரண்–மேல்தட்டு |

**பா**

| | |
|---|---|
| பானம்–குடிக்கத்தக்கது | பாணம்–அம்பு |
| பானி–பருகுவோன் | பாணி–தாமதம்; அழகு; கை |
| பான்–பத்து(இருபானாள்) | பாண்–இசைப்பாட்டு |

**பு**

| | |
|---|---|
| புனரி–புனலித்தண்டு | புணரி–அலை; கடல் |
| புனை–அலங்கரி | புணை–தெப்பம் |

**பூ**

| | |
|---|---|
| பூனை – பூனை | பூணை – முல்லை நிலம் |

**பே**

| | |
|---|---|
| பேன்–சீலைப்பேன் | பேண்–காப்பாற்று |

**ம**

| | |
|---|---|
| மனம்–மனசு | மணம்–வாசனை;கலியாணம் |
| மனை–வீடு | மணை–பலகை |
| மன்–அரசன்;பெருமை; நிலைபெறு | மண்–பூமி |
| மன்மகள்–அரசன் மகள் | மண்மகள்–பூமாதேவி |

| | |
|---|---|
| மன்னுதல்–நிலைபெறுதல் | மண்ணுதல்–அலங்கரித்தல்;நீராட்டல் |

## மா

| | |
|---|---|
| மானம்–பெருமை;குற்றம் | மாணம்–மாட்சிமை |
| மான்–மான் | மாண்–மாட்சிமை |

## மு

| | |
|---|---|
| முனை–யுத்தம்;பகை | முணை–மிகுதி |
| முன்னாள்–முன் நாள் | முந்நாள்–மூன்று நாள் |

## வ

| | |
|---|---|
| வன்னம்–நிறம் | வண்ணம்–வகை |
| வன்மை–வலிமை | வண்மை – கொடை; செல்வம் |

## வா

| | |
|---|---|
| வானம்–மழை;ஆகாயம் | வாணம்–அம்பு;நெருப்பு |

*******

# பெயர் வினை வேறுபாடு

சொற்களுள் சில, பெயர்சொல்லாக வழங்குகின்றன; வேறுசில, வினைச்சொல்லாக வழங்குகின்றன; மற்றுஞ் சில, பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வழங்குகின்றன. இம்மூவகைப்பட்ட சொற்களுள் பெயராயும் வினையாயும் இருக்கும் சொல், பெயர்ச்சொல்லாய் நிற்கும்போது தரும் பொருள் இது என்பதையும், வினைச் சொல்லாய் நிற்கும்போது தரும் பொருள் இது என்பதையும் மாணவர் அறியவேண்டுவது அவசியம். அதுபற்றி, கீழே அட்டவணையில் அவ்வாறு பெயர்வினைப் பொருள் வேறுபாட்டைக் காட்டும் சொற்களுள் சில விளக்கப்பட்டுள்ளன.

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **அ** | | |
| அகல் | ..... | தகழி | ..... | நீங்கு |
| அகழ் | ..... | அகழி | ..... | தோண்டு |
| அடர் | ..... | தகடு | ..... | நெருங்கு;போர்செய் |
| அடி | ..... | ஆதி;கால் | ..... | அடி |
| அடை | ..... | அப்பம்; இலை | ..... | துறு;சேர்;காவலில் இடு |
| அணி | ..... | அழகு; ஆபரணம் | ..... | தரி;அலங்கரி |
| அணை | ..... | கரை;மெத்தை | ..... | சேர் |
| அப்பு | ..... | நீர்; கடல் | ..... | கனமாகப் பூசு |
| அமர் | ..... | போர் | ..... | பொருந்து; போர்செய் |
| அமை | ..... | மூங்கில் | ..... | பொருத்தி வை |
| அரக்கு | ..... | அவலரக்கு;சிவப்பு | ..... | தேய் |
| அரும்பு | ..... | முகை; பூவரும்பு | ..... | முகிழ்;தோன்று |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| அரை | ..... | பாதி; இடை | ..... | பொடிசெய்;அரை |
| அலர் | ..... | மலர்ந்த பூ | ..... | விரி |
| அலை | ..... | நீர்த்திரை;கடல் | ..... | துன்பப்படு; வருந்து |
| அளி | ..... | வண்டு;கொடை | ..... | கொடு;காப்பாற்று |
| அளை | ..... | தயிர்; புற்று; குகை | ..... | குழை; கலக்கு; கடை |
| அறை | ..... | சிறுவீடு; ஒலி | ..... | அடி;சொல்;பறையடி |
| அள் | ..... | காது;கூர்மை | ..... | அள்ளு;நெருங்கு |

## ஆ

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடு | ..... | ஆடு(மிருகம்) | ..... | நடி;அசை |
| ஆய் | ..... | தாய்;வருத்தம் | ..... | ஆராய் |
| ஆர் | ..... | நிறைவு;ஆத்தி | ..... | நிறை;குடி;பொருந்து |
| ஆள் | ..... | அடிமை | ..... | அடிமைகொள் |
| ஆறு | ..... | வழி;நதி;ஓர் எண் | ..... | அடங்கு;தணி |

## இ

| | | | | |
|---|---|---|---|---|
| இசை | ..... | சொல்; இசைப்பாட்டு | ..... | கூடிநில்; பொருந்து |
| இடி | ..... | ஒலி;சிற்றுண்டி;மா | ..... | இடிப்பாய்; ஒலிப்பாய் |
| இடை | ..... | இடம்;நடு;பக்கம் | ..... | ஒதுங்கு; விலகு |
| இணை | ..... | துணை;உவமை | ..... | சேர்; கூட்டு |
| இமை | ..... | இமை;கரடி;மயில் | ..... | கண்மூடு |
| இயல் | ..... | இசை; இயற்றமிழ் | ..... | பொருந்து |
| இரா | ..... | இரவு | ..... | இருக்கமாட்டா |
| இரை | ..... | ஒலி;பறவைமுதலியவற்றின் உணவு | ..... | ஒலிசெய் |
| இல் | ..... | இடம்; மனைவி | ..... | இல்லை |
| இளை | ..... | பூமி;காவற்காடு | ..... | மெலி |
| இறை | ..... | அரசன்;கடவுள் | ..... | இறை;வீசு |

| சொல் | பெயர்ப்பொருள் | வினைப்பொருள் |
|---|---|---|
| | **ஈ** | |
| ஈ | ..... வண்டு | ..... கொடு; தா |
| ஈர் | ..... சிறுபேன் | ..... பிள;வகிர்;இழு |
| | **உ** | |
| உடல் | ..... உடம்பு;பொன் | ..... கோபி;வருத்து |
| உடை | ..... செல்வம்;சேலை | ..... உடை |
| உண்டி | ..... உணவு;சோறு | ..... உண்கிறாய் |
| உப்பு | ..... இனிமை;கடல் | ..... வீங்கு |
| உருள் | ..... உருளை;வண்டி | ..... உருளு |
| உரை | ..... புகழ்;பொன் | ..... தேய்;சொல் |
| உலா | ..... ஒருவகைப் பிரபந்தம் | ..... உலாவு |
| உலை | ..... கொல்லனுலை | ..... அழி;கெடு;வருத்து |
| உழக்கு | ..... காற்படி | ..... கலக்கு;கொன்றுதிரி |
| உழை | ..... மான் | ..... பாடுபடு |
| உறை | ..... உயர்ச்சி துளி | ..... தோய்;வாசஞ்செய் |
| | **எ** | |
| எள் | ..... ஒரு தானியம் | ..... நிந்தி;இகழ் |
| ஏந்தல் | ..... அரசன்;உயர்ச்சி | ..... ஏந்துவாயாக |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **ஒ** | | |
| ஒலி | ..... | ஆரவாரம்;பேரிசை | ..... | சப்தி;ஆரவாரி |
| ஒற்று | ..... | வேவு; தூதன் | ..... | ஒற்றியெடு |
| | | **ஓ** | | |
| ஓடு | ..... | ஓடு; சிப்பி | ..... | விரைந்துசெல் |
| | | **க** | | |
| கடா | ..... | ஆடு,எருமை முதலியவற்றின் –ஆண்; வினா | ..... | வினவு;செலுத்து |
| கடி | ..... | மணம்;வாசனை;விரைவு | ..... | கடிப்பாய் |
| கடை | ..... | கடை;முடிவு;இடம் | ..... | கடைவாய் |
| கட்டு | ..... | பொய்;காவல் | ..... | கட்டுவாய் |
| கணி | ..... | வேங்கைமரம் | ..... | கணக்கிடு;குணி |
| கரை | ..... | எல்லை;சொல் | ..... | அழை;இரங்கு |
| கலை | ..... | மான்;கல்வி | ..... | குலை;அழி |
| கல் | ..... | மலை;ஒலிக்குறிப்பு | ..... | படி;தோண்டு |
| கவர் | ..... | மரக்கப்பு | ..... | அபகரி |
| கவி | ..... | பா;குரங்கு;புலவன் | ..... | மூடு |
| கழி | ..... | உப்பங்கழி;மிகுதி | ..... | நீக்கு;கடத்து |
| கழு | ..... | சூலம் | ..... | அலம்பு;கழுவு |
| கறி | ..... | மிளகு;காய்கறி | ..... | கடி |
| கனி | ..... | செறிவு;பழம் | ..... | நை;இரங்கு |
| | | **கா** | | |
| கா | ..... | சோலை;சரசுவதி | ..... | காவல்செய்;இரட்சி |
| காய் | ..... | மரத்தின் காய் | ..... | கோபி |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **கி** | | |
| கிழி | ..... | பணப்பொதி; எழுதுபடம் | ..... | கிழிப்பாய்; கீறு |
| கிளர் | ..... | ஒளி; பூந்தாது | ..... | கிண்டு; சொல் |
| | | **கீ** | | |
| கீழ் | ..... | ஈனம்; கிழக்கு; பள்ளம் | ..... | பிள |
| | | **கு** | | |
| குடி | ..... | குலம்; கோத்திரம் | ..... | பருகு |
| குடை | ..... | குடை; உடைவேல் | ..... | கடை; நீராடு |
| குழை | ..... | குண்டலம் | ..... | குழைப்பாய் |
| குலை | ..... | நடுக்கம்; மரக்குலை | ..... | கலை; அழி |
| குறி | ..... | அடையாளம்; குறிப்பு | ..... | கணி; மதி; கருது |
| | | **கூ** | | |
| கூ | ..... | பூமி | ..... | அழை;கூவு |
| கூடு | ..... | பறவைக்கூடு | ..... | சேர் |
| கூறு | ..... | பங்கு;பகுதி | ..... | சொல் |
| | | **கே** | | |
| கேள் | ..... | உறவு;சிநேகம் | ..... | கேள்;வினாவு |
| | | **கொ** | | |
| கொள் | ..... | ஒருவகைப்பயறு | ..... | வாங்கு |
| கொறி | ..... | செம்மறியாடு;ஆடு | ..... | கொறி |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **கோ** | | |
| கோடி | ..... | ஓர் எண்;புதுச்சீலை | ..... | கொள்வாய் |
| கோபி | ..... | கோபமுள்ளவன் | ..... | கோபிப்பாய் |
| கோல் | ..... | செங்கோல்;அம்பு;மரக்கொம்பு | ..... | சூழ்; வளை |
| | | **ச** | | |
| சகி | ..... | தோழி | ..... | பொறு |
| சங்கரி | ..... | பார்வதி | ..... | அழி |
| சந்தி | ..... | மாலைநேரம்;மூங்கில் | ..... | கூடு;சேர் |
| சரி | ..... | ஒப்பு;கைவளை | ..... | சாயச்செய் |
| | | **சா** | | |
| சாடு | ..... | பண்டி | ..... | உதை;அடி;மோது |
| சாதி | ..... | குலம்;தேக்கு | ..... | நிறைவேற்று |
| | | **சி** | | |
| சிந்து | ..... | கடல்;ஓர் ஆறு; ஓர் நாடு | ..... | சிதறு |
| சிலம்பு | ..... | மலை; பாதகிண்கிணி | ..... | ஒலி; சத்தமிடு |
| | | **சீ** | | |
| சீ | ..... | இலக்குமி; சம்பத்து | ..... | சீப்பாய்; கிளறு |
| | | **சு** | | |
| சுழி | ..... | நீர்ச்சுழி | ..... | சுழிப்பாய் |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **சூ** | | |
| சூடு | ..... | வெப்பம் | ..... | அணி; சூடுவாய் |
| | | **செ** | | |
| செப்பு | ..... | செம்பு | ..... | சொல் |
| செயல் | ..... | ஒழுக்கம்;தொழில் | ..... | செய்க; செய்யற்க |
| செய் | ..... | புலம் | ..... | தொழில்செய் |
| செல் | ..... | கறையான்;மேகம் | ..... | போ |
| செறி | ..... | நெருக்கம்; மிகுதி | ..... | நெருங்கு |
| | | **சொ** | | |
| சொக்கு | ..... | அழகு;பொன் | ..... | மயங்கு |
| சொல் | ..... | சொல்; புகழ் | ..... | சொல்வாய் |
| | | **சோ** | | |
| சோதி | ..... | ஒளி | ..... | ஆராய்;பரிசோதி |
| சோம்பு | ..... | பெருஞ் சீரகம் | ..... | சோம்பியிரு |
| | | **த** | | |
| தகர் | ..... | செம்மறியாடு | ..... | உடை |
| தகை | ..... | குணம்;பெருமை | ..... | தடு |
| தடி | ..... | சிறுவயல்;தண்டு | ..... | தறி; வெட்டு |
| தட்டு | ..... | களகு;குற்றம் | ..... | தாளம்போடு |
| தம்பி | ..... | பின் பிறந்தோன் | ..... | வாயுவையடை |
| தளை | ..... | காற்சிலம்பு; வயலின் சிறுவரம்பு; செய்யுளின் தளை | ..... | தடைசெய்;கட்டு |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **தி** | | |
| திரி | ..... | விளக்குத்திரி;மூன்று | ..... | திரிவாய் |
| | | **தீ** | | |
| தீ | ..... | அறிவு;தீமை | ..... | சுடு;கொளுத்து |
| | | **து** | | |
| துடி | ..... | உடுக்கை | ..... | துடிப்பாய் |
| துப்பு | ..... | வலிமை;பவளம் | ..... | காறியுமிழ் |
| துவக்கு | ..... | உடம்பு;சங்கிலி | ..... | ஆரம்பி;கட்டு |
| | | **தூ** | | |
| தூ | ..... | ஊன்;சுத்தம் | ..... | தூவு |
| தூக்கு | ..... | உறி;உயர்ச்சி | ..... | ஆராய்; தூக்குவாய் |
| தூறு | ..... | பழிச்சொல் | ..... | பழிகூறு |
| | | **தே** | | |
| தேக்கு | ..... | ஓர் மரம் | ..... | ஏப்பமிடு |
| | | **தை** | | |
| தை | ..... | ஓர் மாதம் | ..... | துணி தை |
| | | **தொ** | | |
| தொழு | ..... | தொழுமரம்;பட்டி | ..... | வணங்கு;கும்பிடு |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **ந** | | |
| நகர் | ..... | ஊர்;வீடு | ..... | பெயர்வாய் |
| நகை | ..... | ஆபரணம்;இகழ்ச்சி | ..... | சிரி |
| நடி | ..... | நாடகப்பெண் | ..... | ஆடு;நடனஞ்செய் |
| நடு | ..... | இடை;நீதி;பூமி | ..... | நாட்டு |
| | | **நா** | | |
| நாடு | ..... | இடம்; பக்கம் | ..... | ~~ஆராய்; தேடு; கருது~~ |
| | | **நி** | | |
| நிரை | ..... | ஒழுங்கு; பசுக்கூட்டம் | ..... | வரிசையாக்கு |
| நிழல் | ..... | குளிர்ச்சி; சாயை | ..... | குளிர்ச்சிசெய்; ஒளிசெய் |
| நிறை | ..... | கற்பு | ..... | நிரப்பு |
| | | **நீ** | | |
| நீ | ..... | முன்னிலைப் பெயர் | ..... | நீக்கு |
| | | **நு** | | |
| நுதல் | ..... | நெற்றி; புருவம் | ..... | கருது |
| நுனி | ..... | முனை | ..... | கூர்மை செய் |
| | | **நூ** | | |
| நூல் | ..... | சாத்திரம் ; பருத்தி நூல் | ..... | நூற்பாய் |
| நூறு | ..... | ஓர் எண்; பொடி | ..... | அழி |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **நே** | | |
| நேர் | ..... | எதிர்; பாதி; நீதி; ஓரசை | ..... | உடன்படு |
| | | **நொ** | | |
| நொடி | ..... | காலநுட்பம் | ..... | சொல்; நொடிப்பாய் |
| | | **ப** | | |
| பகிர் | ..... | பகுப்பு;வெடிப்பு | ..... | பங்கிடு |
| பகை | ..... | விரோதம்;பகைவன் | ..... | விரோதம் செய் |
| படர் | ..... | கருத்து; துன்பம் | ..... | போ; படர்வாய் |
| படல் | ..... | ஓலைக் கதவு | ..... | படுக; கெடுக |
| படி | ..... | பூமி;நாழி;குணம் | ..... | வாசி |
| படு | ..... | கள்; குளம் | ..... | படுத்துக்கொள் |
| படை | ..... | சேனை;கல்லணை | ..... | உண்டாக்கு |
| பணி | ..... | நகை; வேலை | ..... | தொழு; சொல் |
| பணை | ..... | மூங்கில்; வயல்; முரசு | ..... | பருக்கச்செய் |
| பண் | ..... | இசை | ..... | செய்; பண்ணு |
| பரசு | ..... | மழு | ..... | துதி |
| பரப்பு | ..... | கடல்; பரப்பளவு | ..... | பரப்பு |
| பரி | ..... | குதிரை ;சுமை | ..... | ஆதரி, பாதுகா |
| பழி | ..... | குற்றம்,பொல்லாங்கு | ..... | நிந்தி, வசைகூறு |
| பழு | ..... | விலாவெலும்பு,ஏணியின்பழு | ..... | பழுப்பாய் |
| பறி | ..... | மீன்போடும் ஓலைப்பை | ..... | கவர்; பறிப்பாய் |
| பற்று | ..... | அன்பு; ஆசை | ..... | ஊன்று; பிடி |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|

### பா

| | | | | |
|---|---|---|---|---|
| பா | ..... | பாட்டு | ..... | பரப்பு |
| பாய் | ..... | படுக்கும்பாய்; கப்பற்பாய் | ..... | தாவு; தாண்டு; குதி |
| பாவி | ..... | தீயோன்; வரற்பாலது | ..... | மதி; பாவனை செய் |

### பி

| | | | | |
|---|---|---|---|---|
| பிடி | ..... | பெண் யானை;கைப்பிடி | ..... | பிடிப்பாய் |
| பிணி | ..... | துன்பம்; வியாதி | ..... | கட்டு |
| பிந்து | ..... | துளி | ..... | பின்னிடு |
| பிணை | ..... | ஆசை; பெண்மிருகம் | ..... | இணை; கட்டு |
| பிதிர் | ..... | திவலை; கால நுட்பம் | ..... | பிதுங்கு |
| பிழி | ..... | கள் | ..... | பிழிவாய் |
| பிழை | ..... | குற்றம் | ..... | உய்; குற்றம் செய் |

### பு

| | | | | |
|---|---|---|---|---|
| புடை | ..... | இடம்;பக்கம் | ..... | அடி;குத்து |
| புணை | ..... | தெப்பம் | ..... | புணைப்பாய் |
| புதை | ..... | அம்பறாகூடு; புதுமை | ..... | புதைப்பாய்;மறை |
| புரி | ..... | கயிறு; ஊர் | ..... | செய்;விரும்பு |
| புல் | ..... | புன்மை; அறுகம்புல் | ..... | சேர்; தழுவு |
| புளி | ..... | புளியமரம்; ஓர் சுவை | ..... | புளிப்பாகு |
| புனை | ..... | விலங்கு; அழகு | ..... | அலங்கரி |

### பூ

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | ..... | புட்பம்; அழகு | ..... | மலர் |
| பூரி | ..... | கலப்புநெல்; பொன் | ..... | பெருகு; மகிழ் |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **பெ** | | |
| பெயர் | ..... | நாமம்; பெருமை | ..... | பேர்வாய் |
| பெருக்கு | ..... | வெள்ளம்; மிகுதி | ..... | பெருகச்செய் |
| | | **பே** | | |
| பேதி | ..... | இரசம் | ..... | வேறுபடுத்து |
| | | **பொ** | | |
| பொடி | ..... | தூள்; புழுதி; விபூதி | ..... | பொடிசெய் |
| பொறி | ..... | அடையாளம்; அறிவு; செல்வம்; இலக்குமி | ..... | எழுது; சித்திரி |
| | | **போ** | | |
| போக்கு | ..... | வழி; குற்றம் | ..... | போகச்செய்; கழி |
| | | **ம** | | |
| மதி | ..... | அறிவு; சந்திரன் | ..... | கடை; மத்தி |
| மலர் | ..... | பூ | ..... | மலர்த்து;விரி |
| மறு | ..... | மாசு; குற்றம் | ..... | தடு |
| மறை | ..... | வேதம்; இரகசியம் | ..... | மறைத்துவை |
| | | **மா** | | |
| மாறு | ..... | வேறு; துடைப்பம் | ..... | வேறாகு |
| | | **மை** | | |
| மை | ..... | கறுப்பு, ஆடு; நீர் | ..... | மையச்செய் |

| சொல் | | பெயர்ப்பொருள் | | வினைப்பொருள் |
|---|---|---|---|---|
| | | **வ** | | |
| வசி | ..... | கூர்மை; வாள் | ..... | தங்கு; வாசஞ்செய் |
| வஞ்சி | ..... | ஓர்கொடி; ஒருவகைப்பா..... | | வஞ்சனைசெய் |
| வடி | ..... | கள்; திருத்தம் | ..... | வடிப்பாய் |
| வட்டி | ..... | முதலின் ஊதியம் | ..... | பரிமாறு |
| வந்தனம் | ..... | வணக்கம் | ..... | வந்தோம் |
| வரி | ..... | எழுத்து; குடியிறை | ..... | எழுது;கட்டு; கோரு |
| வரை | ..... | மலை; எல்லை | ..... | எழுது; சித்திரி |
| வலி | ..... | வன்மை | ..... | உடன்படுத்து; இழு |
| வழி | ..... | காரணம், முறை | ..... | வழிப்பாய் |
| வளை | ..... | கைவளை; சங்கு | ..... | தடைசெய்; சூழ் |
| | | **வா** | | |
| வாசி | ..... | குதிரை, உயர்வு தாழ்வு | ..... | படி, வாசி |
| வாதி | ..... | வாதம்செய்வோன் | ..... | தருக்கி; வழக்கிடு |
| | | **வி** | | |
| விதை | ..... | வித்து | ..... | விதைப்பாய் |
| விரை | ..... | வாசனை | ..... | துரிதப்படு |
| விழி | ..... | கண், கண்மணி | ..... | கண்விழி; துயிலெழு |
| விளக்கு..... | | தீபம்; ஒளி | ..... | துலக்கு; விளக்குவாய் |
| | | **வே** | | |
| வேய் | ..... | மூங்கில்; உட்டுளை | ..... | அணி; வேய்வாய் |

# 5. எதிரிடைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அகம் | .............. | புறம் |
| அகழ்தல் | .............. | தூர்த்தல் |
| அகலம் | .............. | குறுக்கம் |
| அகலல் | .............. | கிட்டுதல் |
| அங்கன் | .............. | அநங்கன் |
| அடி | .............. | முடி |
| அடைப்பு | .............. | திறப்பு |
| அந்நியம் | .............. | அநந்நியம் |
| அர்த்தம் | .............. | அநர்த்தம் |
| அறம் | .............. | மறம் |
| அலர்தல் | .............. | குவிதல் |
| ஆகூழ் | .............. | போகூழ் |
| ஆக்கல் | .............. | அழித்தல் |
| ஆதாரம் | .............. | நிராதாரம் |
| ஆதி | .............. | அந்தம் |
| ஆரம்பம் | .............. | முடிவு |
| ஆரோகணம் | .............. | அவரோகணம் |
| இசை | .............. | வசை |
| இணங்கல் | .............. | பிணங்கல் |
| இணை | .............. | தனி |
| இம்மை | .............. | மறுமை |
| இதம் | .............. | அகிதம் |
| இன்சொல் | .............. | வன்சொல் |

| | | |
|---|---|---|
| இன்பம் | ............... | துன்பம் |
| இல்லறம் | ............... | துறவறம் |
| இலாபம் | ............... | நஷ்டம் |
| இயற்கை | ............... | செயற்கை |
| இளமை | ............... | முதுமை |
| ஈதல் | ............... | ஏற்றல் |
| ஈரம் | ............... | வறட்சி |
| உண்டு | ............... | இல்லை |
| உண்மை | ............... | இன்மை |
| உத்தமன் | ............... | அதமன் |
| உபகாரம் | ............... | அபகாரம் |
| உபயம் | ............... | தனி |
| உயர்வு | ............... | தாழ்வு |
| உள் | ............... | வெளி |
| உறவு | ............... | பகை |
| ஊடல் | ............... | கூடல் |
| எரிதல் | ............... | அவிதல் |
| ஏறல் | ............... | இறங்கல் |
| ஒன்னார் | ............... | உற்றார் |
| ஓங்கல் | ............... | ஒடுங்கல் |
| கட்டுதல் | ............... | அவிழ்த்தல் |
| கண்டம் | ............... | அகண்டம் |
| கலக்கம் | ............... | தெளிவு |
| கவனம் | ............... | மறதி |
| களங்கம் | ............... | நிஷ்களங்கம் |
| கற்றார் | ............... | கல்லார் |
| கனவு | ............... | நனவு |
| காப்பாற்றுதல் | ............... | கைவிடுதல் |
| காலம் | ............... | அகாலம் |

| | | |
|---|---|---|
| காலை | .............. | மாலை |
| குணம் | .............. | குற்றம் |
| குறைவு | .............. | நிறைவு |
| கூடல் | .............. | பிரிதல் |
| கொள்வனை | .............. | கொடுப்பனை |
| கொடுக்கல் | .............. | வாங்கல் |
| கொடுமை | .............. | செம்மை |
| சத்தம் | .............. | நிசத்தம் |
| சரீரி | .............. | அசரீரி |
| சாரம் | .............. | அசாரம் |
| சுகம் | .............. | துக்கம் |
| சுமங்கலி | .............. | அமங்கலி |
| சுருங்கல் | .............. | விரிதல் |
| சுசி | .............. | அசுசி |
| செங்கோல் | .............. | கொடுங்கோல் |
| செல்வம் | .............. | வறுமை |
| செலவுக்காரன் | .............. | சிக்கனக்காரன் |
| சேய்மை | .............. | அண்மை |
| சேர்த்தல் | .............. | பிரித்தல் |
| சேர்தல் | .............. | நீங்கல் |
| சௌக்கியம் | .............. | அசௌக்கியம் |
| தக்கார் | .............. | தகவிலார் |
| தமர் | .............. | பிறர் |
| தன்னலம் | .............. | பிறன்நலம் |
| தலையெடுப்பு | .............. | தலையிறக்கம் |
| தவம் | .............. | அவம் |
| தாமதம் | .............. | துரிதம் |
| திண்மை | .............. | நொய்மை |
| தூக்கம் | .............. | விழிப்பு |

| | | |
|---|---|---|
| தூரம் | ............... | சமீபம் |
| தேடல் | ............... | அழித்தல் |
| தொகை | ............... | விரி |
| தோல்வி | ............... | வெற்றி |
| தோற்பு | ............... | செலிப்பு |
| தோன்றுதல் | ............... | மறைதல் |
| நல்லோர் | ............... | தீயோர் |
| நண்பகல் | ............... | நள்ளிரவு |
| நன்மை | ............... | தீமை |
| நனைதல் | ............... | புலர்தல் |
| நல்லொழுக்கம் | ............... | தீயொழுக்கம் |
| நல்வழி | ............... | அல்வழி |
| நல்வினை | ............... | தீவினை |
| நித்தியம் | ............... | அநித்தியம் |
| நினைவு | ............... | மறதி |
| நீதி | ............... | அநீதி |
| நீளம் | ............... | குள்ளம் |
| நுண்பொருள் | ............... | பருப்பொருள் |
| நுண்மை | ............... | பருமை |
| நெடுமை | ............... | குறுமை |
| பல | ............... | சில |
| பருமன் | ............... | ஒல்லி |
| பருத்தல் | ............... | சிறுத்தல் |
| பாலர் | ............... | விருத்தர் |
| பிரதட்சணம் | ............... | அப்பிரதட்சணம் |
| பிறப்பு | ............... | இறப்பு |
| பின்னம் | ............... | அபின்னம் |
| பிடித்தல் | ............... | விடுதல் |
| புதுமை | ............... | பழமை |

| | | |
|---|---|---|
| புகழ்தல் | ............... | இகழ்தல் |
| புகழ்ச்சி | ............... | இகழ்ச்சி |
| புண்ணியம் | ............... | பாவம் |
| பூரிப்பு | ............... | வாட்டம் |
| பெருக்கம் | ............... | சுருக்கம் |
| பெருமை | ............... | சிறுமை |
| பெரியவன் | ............... | சிறியவன் |
| பெரும்பான்மை | ............... | சிறுபான்மை |
| பேதம் | ............... | அபேதம் |
| பொய்ம்மை | ............... | மெய்ம்மை |
| போற்றுதல் | ............... | தூற்றுதல் |
| மடமை | ............... | புலமை |
| மண்டலம் | ............... | விண்டலம் |
| மடித்தல் | ............... | விரித்தல் |
| மங்கலம் | ............... | அமங்கலம் |
| மரியாதை | ............... | அவமரியாதை |
| மருள் | ............... | தெருள் |
| மறைதல் | ............... | வெளிப்படல் |
| தெளிவு | ............... | கலக்கம் |
| முகமலர்ச்சி | ............... | முகச் சுளிப்பு |
| முனிவு | ............... | கனிவு |
| முன்பு | ............... | பின்பு |
| முதல் | ............... | ஈறு |
| மூடுதல் | ............... | திறத்தல் |
| மென்மை | ............... | வன்மை |
| மேன்மக்கள் | ............... | கீழ்மக்கள் |
| மேன்மை | ............... | கீழ்மை |
| மேல் | ............... | கீழ் |
| மேடு | ............... | பள்ளம் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளல் | ............... | கைவிடுதல் |
| ரூபம் | ............... | அரூபம் |
| வரவு | ............... | செலவு |
| வளர்தல் | ............... | தேய்தல் |
| வளைதல் | ............... | நிமிர்தல் |
| வலம் | ............... | இடம் |
| வாழ்வு | ............... | தாழ்வு |
| விருப்பு | ............... | வெறுப்பு |
| விரோதம் | ............... | அவிரோதம் |
| விவேகி | ............... | அவிவேகி |
| வெம்மை | ............... | தண்மை |
| வெப்பம் | ............... | தட்பம் |
| வெந்நீர் | ............... | தண்ணீர் |
| வேற்றுமை | ............... | ஒற்றுமை |

*******

# ஆண்பால், பெண்பால் பெயர்கள்

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அச்சன் | அச்சி |
| அண்ணன் | அண்ணி |
| அநுசன் | அநுசை |
| அப்பன் | அம்மை |
| அமைச்சன் | அமைச்சி |
| அம்மான் | அத்தை |
| அரசன் | அரசி |
| அலவன் | பெடை நண்டு |
| ஆசிரியன் | ஆசிரியை |
| ஆடவன் | பெண்டு |
| ஆதிரையான் | ஆதிரையாள் |
| ஆயன் | ஆய்ச்சி |
| இடையன் | இடைச்சி |
| இந்திரன் | இந்திராணி |
| உபாத்தியாயன் | உபாத்தியாயினி |
| உழவன் | உழத்தி |
| ஊமையன் | ஊமைச்சி |

| ஆண்பால் | பெண்பால் |
| --- | --- |
| எம்பி | எங்கை |
| எயினன் | எயிற்றி |
| ஒருவன் | ஒருத்தி |
| ஓதுவான் | ஓதுவாள் |
| கடுவன் | மந்தி |
| கடா | கிடாரி, மறி |
| கணக்கன் | கணக்கச்சி |
| கணவன் | மனைவி |
| கண்ணன் | கண்ணி |
| கரியன் | கரியள் |
| கருவூரான் | கருவூராள் |
| கலை | பிணை |
| களிறு | பிடி |
| கன்னான் | கன்னாத்தி |
| காதலன் | காதலி |
| காந்தன் | காந்தை |
| காளை | பசு |
| கிழவன் | கிழவி |
| குட்டையன் | குட்டைச்சி |
| குறவன் | குறத்தி |
| குருடன் | குருடி |
| கூனன் | கூனி |

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| கூகை | போத்து |
| கொழுந்தன் | கொழுந்தி |
| சிவம் | சத்தி |
| சிவன் | சிவை |
| சிறியன் | சிறியள் |
| சிறுக்கன் | சிறுக்கி |
| சிறுவன் | சிறுமி |
| சிற்றப்பன் | சிற்றன்னை |
| சீமான் | சீமாட்டி |
| செட்டி | செட்டிச்சி |
| செவிடன் | செவிடி |
| செல்வன் | செல்வி |
| சேங்கன்று | கிடாரி |
| சேவல் | பெட்டை |
| சோழியன் | சோழிச்சி |
| தச்சன் | தச்சச்சி |
| தட்டான் | தட்டாத்தி |
| தந்தை | தாய் |
| தமையன் | தமக்கை |
| தம்பி | தங்கை |
| தனயன் | தனயை |
| தனவான் | தனவந்தி |
| திருமால் | திருமகள் |

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| திருவாளன் | திருவாட்டி |
| தெலுங்கன் | தெலுங்கச்சி |
| தேவராளன் | தேவராட்டி |
| தேவன் | தேவி |
| தோழன் | தோழி |
| நண்பன் | நண்பி |
| நல்லன் | நல்லள் |
| நான்முகன் | கலைமகள் |
| நெட்டையன் | நெட்டைச்சி |
| பண்டிதன் | பண்டிதை |
| பரவன் | பரத்தி |
| பள்ளன் | பள்ளி, பள்ளத்தி |
| பறையன் | பறைச்சி |
| பாட்டன் | பாட்டி |
| பாணன் | பாணத்தி |
| பிரான் | பிராட்டி |
| புதல்வன் | புதல்வி |
| புலவன் | புலத்தி |
| புலையன் | புலைச்சி |
| பெரியன் | பெரியள் |
| பெருமான் | பெருமாட்டி |
| பேரன் | பேத்தி |
| பொன்னன் | பொன்னி |

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| மகன் | மகள் |
| மணவாளன் | மணவாட்டி |
| மணாளன் | மணாட்டி |
| மருமகன் | மருமகள் |
| மாணவன் | மாணவி |
| மருத்துவன் | மருத்துவச்சி |
| மலையாளன் | மலையாட்டி |
| மாணாக்கன் | மாணாக்கி |
| மாமன் | மாமி |
| முடவன் | முடத்தி |
| முதலியார் | முதலிச்சி |
| முதியவன் | முதியவள் |
| மூதாளன் | மூதாட்டி |
| மூத்தான் | மூத்தாள் |
| மைத்துனன் | மைத்துனி |
| வணிகன் | வணிகச்சி |
| வண்ணான் | வண்ணாத்தி |
| வீரன் | வீரி |
| வலையன் | வலைச்சி |
| வேலைக்காரன் | வேலைக்காரி |
| வேளாளன் | வேளாட்டி |

# மரபு வழுக்களும், மரபு வழாநிலைகளும்

| <u>மரபு வழு</u> | <u>மரபு வழாநிலை</u> |
|---|---|
| ஆட்டுப்பாகன் | ஆட்டிடையான் |
| யானை இடையன் | யானைப் பாகன் |
| குதிரைக் கன்று | குதிரைக் குட்டி |
| பசுவின் குட்டி | பசுவின் கன்று |
| தென்னங் கன்று | தென்னம் பிள்ளை |
| வேப்பம் பிள்ளை | வேப்பங்கன்று |
| பனம் பிஞ்சு | பனங் குரும்பை |
| புளியங் குரும்பை | புளியம் பிஞ்சு |
| மா ஓலை | மா இலை |
| பனை இலை | பனை ஓலை |
| குருவிக் குட்டி | குருவிக் குஞ்சு |
| கீரிக் குஞ்சு | கீரிப் பிள்ளை |
| நாய்க் குஞ்சு | நாய்க் குட்டி |
| மான் குட்டி | மான் கன்று |
| யானைச் சாணம் | யானை இலத்தி |
| எருமை இலத்தி | எருமைச் சாணம் |
| ஆட்டுச் சாணம் | ஆட்டுப் பிழுக்கை |
| கழுதைச் சாணம் | கழுதை விட்டை |

# போலி

ஒரு மொழியில் ஓர் எழுத்து நிற்குமிடத்தில் அந்த எழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது.

| | |
|---|---|
| அறம் | அறன் |
| கலம் | கலன் |
| நிலம் | நிலன் |
| குணம் | குணன் |
| மரம் | மரன் |
| சுரும்பு | சுரும்பர் |
| அரும்பு | அரும்பர் |
| இடக்கு | இடக்கர் |
| வண்டு | வண்டர் |
| வெற்பு | வெற்பர் |
| பந்தல் | பந்தர் |
| சாம்பல் | சாம்பர் |
| குதில் | குதிர் |
| திறம் | திறல் |
| பக்கம் | பக்கல் |
| கூவம் | கூவல் |

| | |
|---|---|
| மதில் | மதிள் |
| திமில் | திமிள் |
| பசல் | பைசல் |
| மயல் | மையல் |
| அமச்சு | அமைச்சு |
| அரயர் | அரையர் |
| ஐஞ்ஞூறு | ஐந்நூறு |
| நண்டு | ஞண்டு |
| நாய் | ஞாய் |
| நாண் | ஞாண் |
| நாயிறு | ஞாயிறு |
| நமன் | ஞமன் |
| முனி | நுனி |
| முகரிகோல் | நுகக் கோல் |
| நீந்து | நீஞ்சு |
| ஐந்து | ஐஞ்சு, அஞ்சு |
| வைத்த | வைச்ச |
| நேயம் | நேசம் |
| கயம் | கசம் |
| ஈயல் | ஈசல் |

*******

# பல்வகைச் சொற்புணர்ச்சி

## உயிரீற்றுப் புணர்ச்சி

அ + உயிர் = அவ்வுயிர்

அ + வழி = அவ்வழி

அ + யானை = அவ்யானை

பல + அணி = பலவணி

பல + ஆண்டு = பல்லாண்டு

சில + ஆடு = சிலவாடு

சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில

பல + பல = பலபல, பலப்பல, பற்பல

சில + கலை = சில்கலை

சில + மலை = சின்மலை

பல + படை = பல்படை

பல + நாள் = பன்னாள்

நிலா + ஒளி = நிலாவொளி

இ +ஏடு = இவ்வேடு

இ + மாடு = இம்மாடு

செடி + உலர்ந்தது செடியுலர்ந்தது

உரி + உப்பு = உரியஉப்பு

நாழி + உரி = நாடுரி

கிளி + அழகு = கிளியழகு

புளி + கறி = புளிங்கறி

புளி + சோறு = புளிஞ்சோறு

புளி + தயிர் = புளிந்தயிர்

நீ + எடு = நீயெடு

அது + இயற்றியவர் = அஃதியற்றியவர்

அது + அன்றி = அஃதன்றி

இது + ஆவது = இஃதாவது

('அது', 'இது' என்ற சொற்களின் பின் உயிர்வரின் மட்டும் அஃது, இஃது என்று திரியும். 'அதுவன்றி' என்பதும், 'அஃது மரம்' என்பதும் தவறாகும்)

திரு + அடி = திருவடி

பூ + எடு = பூவெடு

எ + ஆடை = எவ்வாடை

சே + அடி = சேவடி

தே + ஆலயம் = தேவாலயம்

ஒரே + இடம் = ஒரேயிடம்

நீயே + அறிவாய் = நீயேயறிவாய்

அவனே + ஆடினான் = அவனேயாடினான்

கை + நெகிழ =கைந்நெகிழ

கை + மாறு = கைம்மாறு

இனிமை + சொல் = இன்சொல்

சிறுமை + ஒலி = சிற்றொலி

பெருமை + ஒலி = பேரொலி

பசுமை + கூழ் = பைங்கூழ்

கருமை + குதிரை = கருங்குதிரை

செம்மை + சொல் = செஞ்சொல்

செம்மை + நிறம் = செந்நிறம்

தண்மை + நீர் = தண்ணீர்

வெண்மை + நிறம் = வெண்ணிறம்

வெம்மை + நீர் = வெந்நீர்

வாழை + இலை = வாழையிலை

பனை + ஓலை = பனையோலை

ஆவிரை + வேர் = ஆவிரம் வேர்

கோ + இல் = கோயில், கோவில்

அதுவோ + இது = அஃதோவிது

## மெய்யீற்றுப் புணர்ச்சி

படம் + காட்சி = படக்காட்சி

மண் + குடம் = மட்குடம்

மண் + தாழி = மட்டாழி

கண் + நீர் = கண்ணீர்

தூண் + நெடிது = தூணெடிது

விண் + உலகு = விண்ணுலகு

விண் + நாடு = விண்ணாடு

அறம் + உரை = அறவுரை

மரம் + குறிது = மரங்குறிது

அரம் + சிறிது = அரஞ்சிறிது
மரம் + தழைக்கும் = மரந்தழைக்கும்
மரம் + அழகிது = மரமழகிது
மரம் + வேர் = மரவேர்
சிவம் + பதவி = சிவபதவி
பரம் + நெறி = பரநெறி
நிலம் + வரி = நிலவரி
தீம் + சொல் = தீஞ்சொல்
பவளம் + இதழ் = பவளவிதழ்
செய் + நன்றி = செய்ந்நன்றி
மெய் + நிகழ்ச்சி = மெய்ந்நிகழ்ச்சி
பொய் + மை = பொய்ம்மை
மெய் + மை = மெய்ம்மை
வாணிகர் + தெரு = வாணிகத்தெரு
வேளாளர் + வீதி = வேளாளர்வீதி
வேல் + அழகு = வேலழகு
அல் + திணை = அஃறிணை
கல் + பலகை = கற்பலகை
கல் + நெஞ்சம் = கன்னெஞ்சம்
பல் + பொடி = பற்பொடி; பல்பொடி (பலபொடி)
கல் + தரை = கற்றரை
கல் + தூண் = கற்றூண்
கல் + மலை = கன்மலை
கால் + நான்கு = கானான்கு
முதல் + முதல் = முதன்முதல்

வாழ் + நன் = வாணன்
மகிழ் + நன் = மகிணன்
கல் + குடம் = கட்குடம்
புள் + பறந்தது = புட்பறந்தது
உள் + புறம் = உட்புறம்
எள் + நெய் = எண்ணெய்
வெள் + நெய் = வெண்ணெய்
பனங்கள் + நன்று = பனங்கணன்று
ஆள் + நலம் = ஆணலம்
வேள் + யாவன் = வேளியாவன்
நாள் + தோறும் = நாடோறும்
ஊர்கள் + தோறும் = ஊர்கடோறும்
பொன் + கலம் = பொற்கலம்
பொன் + பணி = பொற்பணி
பொன் + தோடு = பொற்றோடு
பொன் + நன்று = பொன்னன்று
பொன் + அழகு = பொன்னழகு
தன் + நலம் = தன்னலம் (தம் + நலம் = தன்னலம்)
முன் + நாள் = முன்னாள் ( மூன்று + நாள் = முந்நாள்)
 மூன்று + நீர் = முந்நீர்(கடல்)
தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி
தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேங்குழம்பு
தன் + பகை = தற்பகை
தன் + செயல் = தற்செயல்
என் + தந்தை = என்றந்தை, எந்தை
என் + கு = எனக்கு, எற்கு

அவன் + கு = அவனுக்கு, அவற்கு(அவர்+கு= அவருக்கு)
சோழன் + நாடு = சோழநாடு
சிவன் + பெருமான் = சிவபெருமான்
கபிலன் + பரணன் = கபிலபரணர்
வடுகன் + நாதன் = வடுகநாதன்
சேரன் + சோழன் + பாண்டியன் =சேரசோழபாண்டியர்
குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம்
முருகன் + கடவுள் = முருகக் கடவுள்
கந்தன் + வேள் = கந்தவேள்
சுப்பிரமணியன் + முதலியார் = சுப்பிரமணியமுதலியார்
தியாகராசன் + செட்டியார் = தியாகராசச்செட்டியார்

## மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

குரங்கு + மனம் = குரங்குமனம்
குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி, குரக்குக்குட்டி
மருந்து + பை = மருத்துப்பை
இரும்பு + பாதை = இருப்புப்பாதை
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு
அன்பு + தளை = அற்புத்தளை
என்பு + உடம்பு = எற்புடம்பு
இரும்பு + நெஞ்சம் = இருப்புநெஞ்சம்
கன்று + ஆ = கற்றா

# நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

கூடு + புழு = கூட்டுப்புழு

மூடு + பூச்சி = மூட்டுப்பூச்சி

ஆடு + மந்தை = ஆட்டுமந்தை

வீடு + பூனை = வீட்டுப்பூனை

ஆறு + ஓரம் = ஆற்றோரம்

நீறு + பை = நீற்றுப்பை

சோறு + வளம் =சோற்றுவளம்

முரடு + மனிதன் = முரட்டுமனிதன்

எருது + மாடு = எருத்துமாடு

களிறு + யானை = களிற்றியானை

கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

கிணறு + நீர் = கிணற்று நீர்

வயிறு + நோய் = வயிற்றுநோய்

சிறு + ஊர் = சிற்றூர்

<u>பூ, காய், மரப்பெயர்.</u>

பூ + கொடி = பூங்கொடி

பூ+ சோலை = பூஞ்சோலை

பூ + தாது = பூந்தாது

தாழை + பூ = தாழம்பூ

முல்லை + தொடை = முல்லையந்தொடை

விள + காய் = விளங்காய், விளாங்காய்

மா + காய் = மாங்காய்

புளி + காய் = புளியங்காய்

தெங்கு + காய் = தேங்காய்

புன்கு + காய் = புன்கங்காய்

வேம்பு + காய் = வேப்பங்காய்

எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்

மாதுளை + காய் = மாதுளங்காய்

பனை + காய் = பனங்காய்

பனை + அட்டு = பனாட்டு

வழுதுணை + காய் = வழுதுணைக்காய்,

புன்னை + மரம் = புன்னைமரம்

## காலப் பெயர்

பண்டு +காலம் = பண்டைக்காலம்

முந்து + வளம் = முந்தைவளம்

அன்று + கூலி = அற்றைக்கூலி

இன்று + நாள் = இற்றைநாள்

இன்று + பொழுது = இற்றைப்பொழுது

மறு + நாள் = மறுநாள், மற்றைநாள்

நேற்று + பொழுது = நேற்றைப்பொழுது

## திசைப்பெயர்

வடக்கு + மேற்கு = வடமேற்கு

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + திசை = வடதிசை

வடக்கு + காற்று = வடகாற்று

கிழக்கு + பால் = கீழ்பால்

கிழக்கு + திசை = கீழ்திசை

கிழக்கு + காற்று = கீழ்க்காற்று, கீழ்காற்று

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு + மேற்கு = தென்மேற்கு

தெற்கு + மலை = தென்மலை

மேற்கு + கடல் = மேல்கடல்

மேற்கு + திசை = மேற்றிசை, மேலைத்திசை

குடக்கு + திசை = குடதிசை

குணக்கு + கடல் = குணகடல்

## எண்ணுப்பெயர்

ஒன்று + கோடி = ஒருகோடி

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம் ( உயிர்மெய்க்கு முன் ஒரு என்றும், உயிர்க்கு முன் ஓர் என்றும் வருதல் வேண்டும்)

இரண்டு + கோடி = இருகோடி

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம் ( உயிர்மெய்க்கு முன் இரு என்றும், உயிர்க்கு முன் ஈர் என்றும் வருதல் வேண்டும்)

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + நீர் = முந்நீர்
மூன்று + நாழி = முந்நாழி
மூன்று + கடல் = முக்கடல்
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + யானை = நால்யானை
நான்கு + மணி = நான்மணி
நான்கு + கால் = நாற்கால்
நான்கு + இசை = நாற்றிசை
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஐந்து + மூன்று = ஐம்மூன்று
ஐந்து + கால் = ஐங்கால்
ஐந்து + புலம் = ஐம்புலம்
ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்
ஆறு + கால் = அறுகால்
ஆறு + மாடு = அறுமாடு
ஆறு + வீடு = அறுவீடு
ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்
ஏழு+ கடல் = ஏழுகடல், ஏழ்கடல்
ஏழு + மாடு = எழுமாடு
ஏழு + வகை = எழுவகை
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + கடல் = எண்கடல்
எட்டு + வளையல் = எண்வளையல்
ஒன்பது + பத்து = தொண்ணூறு

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம், தொளாயிரம்
ஒன்று + பத்து = ஒருபது
இரண்டு + பத்து = இருபது
மூன்று + பத்து = முப்பது
நான்கு + பத்து = நாற்பது
ஐந்து + பத்து = ஐம்பது
ஆறு = பத்து = அறுபது
ஏழு + பத்து = எழுபது
எட்டு + பத்து = எண்பது
ஒருபது + ஒன்று = ஒருபத்தொன்று, (பதினொன்று)
இருபது + இரண்டு = இருபத்திரண்டு
முப்பது + மூன்று = முப்பத்துமூன்று
பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு
பத்து + மூன்று = பதின்மூன்று
பத்து + நான்கு = பதினான்கு
பத்து + ஆயிரம் = பதினாயிரம்
பத்து + கலம் = பதின்கலம்
பத்து + மடங்கு = பதின்மடங்கு
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதாயிரம்
ஒன்பது + கலம் = ஒன்பதின்கலம்
ஒன்று + ஒன்று = ஒன்றொன்று, ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு + ஈரிரண்டு, இரண்டிரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு

ஐந்து + ஐந்து = ஐவைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
ஒன்பது + ஒன்பது = ஒவ்வொன்பது
பத்து + பத்து = பப்பத்து
நூறு + பத்து = நூற்றுப்பத்து
நூறு + ஆயிரம் = நூறாயிரம்

## ஒருமை பன்மைப் பெயர்கள்

| ஒருமை | பன்மை |
|---|---|
| புறா | புறாக்கள் |
| கிளி | கிளிகள் |
| செடி | செடிகள் |
| மந்திரி | மந்திரிகள், மந்திரிமார் |
| தோழி | தோழியர், தோழிமார் |
| தேனீ | தேனீக்கள் |
| உடு | உடுக்கள் |
| வீடு | வீடுகள் |
| வண்டு | வண்டுகள் |

| ஒருமை | பன்மை |
|---|---|
| பெரியது | பெரியவை, பெரியன |
| சிறியது | சிறியவை, சிறியன |
| எழுத்து | எழுத்துக்கள் |
| கருத்து | கருத்துக்கள் |
| முத்து | முத்துக்கள் |
| வாக்கு | வாக்குக்கள் |
| காப்பு | காப்புக்கள் |
| தோப்பு | தோப்புகள் |
| கீற்று | கீற்றுக்கள் |
| தெரு | தெருக்கள் |
| பூ | பூக்கள் |
| மரம் | மரங்கள் |
| பல் | பற்கள் |
| நாள் | நாள்கள் |
| நாய் | நாய்கள் |
| சுவர் | சுவர்கள் |
| தாய் | தாயர் |
| தந்தை | தந்தையர் |
| அண்ணன் | அண்ணன்மார் |
| நண்பன் | நண்பர் |
| தோழன் | தோழர் |
| வீட்டான், வீட்டாள் | வீட்டார் |
| நல்லவன், நல்லவள் | நல்லவர் |

| ஒருமை | பன்மை |
|---|---|
| நாட்டான் | நாட்டார் |
| யாது | யாவை |
| மற்றது | மற்றவை |
| அவன், அவள் | அவர் |
| எவன், எவள் | எவர் |
| அது | அவை |
| இது | இவை |
| எது | எவை |
| யாது | யாவை |
| தன் | தம் |
| தான் | தாம் |
| என் | எம் |
| எனக்கு | எமக்கு |
| என்னை | எம்மை |
| உன்னை | உம்மை |
| நின்னை | நும்மை |
| யான் | யாம் |
| என்னால் | எம்மால் |
| என்னிடம் | எம்மிடம் |
| பிறன், பிறள் | பிறர் |
| யாவன், யாவள் | யாவர் |

*******

# வடசொல் தமிழ்ச்சொல்லாகத் திரியும் வகை

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| ஜநகன் | சனகன் |
| பங்கஜம் | பங்கயம் |
| ஜாதி | சாதி |
| ப்ரயோஜனம் | பிரயோசனம் |
| பூஜா | பூசை |
| ராஜ்யம் | இராச்சியம் |
| ஜ்யோதி | சோதி |
| ஜ்ஞானம் | ஞானம் |
| ஷண்முகம் | சண்முகம் |
| பொக்கிஷம் | பொக்கிசம் |
| மகிஷி | மகிசி |
| பாஷை | பாடை |
| ரிஷி | இருடி |
| கிருஷ்ணன் | கிருட்டிணன் |
| புஷ்பம் | புட்பம் |
| கஷ்டம் | கட்டம் |
| ஸபா | சபா |
| வாஸம் | வாசம் |

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| உத்ஸவம் | உற்சவம் |
| தபஸ் | தபசு |
| சரஸ்வதி | சரசுவதி |
| ஸ்வாமி | சுவாமி, சாமி |
| ஸ்நேகம் | சிநேகம் |
| ஸ்தானம் | தானம் |
| ஸ்வதேசி | சுதேசி |
| ஸ்வர்க்கம் | சுவர்க்கம், சொர்க்கம் |
| புஸ்தகம் | புத்தகம் |
| பஸ்பம் | பற்பம் |
| ஸக்தி | சத்தி |
| ஸப்தம் | சத்தம் |
| ஹிமாலயம் | இமாலயம் |
| ரோஹிணி | உரோகிணி |
| மஹிமை | மகிமை |
| ~~க்ஷணம்~~ | கணம் |
| பக்ஷணம் | பட்சணம் |
| பக்ஷி | பட்சி |
| அக்ஷரம் | அச்சரம், அக்கரம் |
| க்ஷேமம் | சேமம் |
| லக்ஷ்மி | இலக்குமி |

| | |
|---|---|
| தீக்ஷா | தீக்கை |
| பிக்ஷா | பிச்சை |
| யந்திரம் | இயந்திரம் |
| யூகி | ஊகி |
| தர்மம் | தருமம் |
| கர்னன் | கன்னன் |
| அல்பம் | அற்பம் |
| த்ராவகம் | திராவகம் |
| புண்ணியம் | புண்ணியம் |
| வம்சம் | வமிசம் |

*******

# தன்வினை பிறவினையாகும் வகை

| தன்வினை | பிறவினை |
|---|---|
| நட | நடப்பி |
| கிட | கிடத்து |
| தா | தருவி |
| இரு | இருத்து |
| புகு | புகுத்து |
| ஆடு | ஆட்டு |
| கூடு | கூட்டு |
| படி | படிப்பி |
| எழு | எழுப்பு |
| உறு | உறுத்து |
| ஏறு | ஏற்று |
| ஆறு | ஆற்று |
| உருகு | உருக்கு |
| எழுது | எழுதுவி |
| கருது | கருதுவி |
| அடங்கு | அடக்கு |
| இயங்கு | இயக்கு |
| முழுங்கு | முழுக்கு |

| தன்வினை | பிறவினை |
| --- | --- |
| நீந்து | நீத்து |
| தோன்று | தோற்று |
| உண் | உண்பி, ஊட்டு |
| பூண் | பூட்டு |
| காண் | காட்டு |
| காய் | காய்ச்சு |
| தேய் | தேய்ப்பி |
| அடர் | அடர்த்து |
| துயில் | துயிற்று |
| சுழல் | சுழற்று |
| பயில் | பயிற்று |
| பொருந்து | பொருத்து |
| திருந்து | திருத்து |
| எழும்புக | எழுப்புக |
| பழகு | பழக்கு |
| விலகு | விலக்கு |
| புரள் | புரட்டு |
| உருள் | உருட்டு |
| தாழ் | தாழ்த்து |
| திரும்பு | திருப்பு |

*******

# வல்லெழுத்துக்கள் மிகும் இடங்கள்

(வல்லெழுத்துக்கள் ஆறனுள் க,ச,த,ப ஆக நான்குமே மொழிக்கு முதலில் வருவன.)

அ + கிளி = அக்கிளி
அந்த + காளை = அந்தக்காளை
இந்த + பசு = இந்தப்பசு
எந்த + தட்டு = எந்தத் தட்டு
அது தவிர + தேடினான் = அது தவிரத் தேடினான்
அதுபோல + கூறினான் = அதுபோலக் கூறினான்
பைய + சென்றான் = பையச் சென்றான்
மெல்ல + பேசினான் = மெல்லப் பேசினான்
சால + பேசினான் = சாலப் பேசினான்
மிக + சொன்னான் = மிகச் சொன்னான்
மற்ற + கரடி = மற்றக்கரடி
வருவதாக + கூறினான் = வருவதாகக் கூறினான்
போவதாக + சொன்னான் = போவதாகச் சொன்னான்
பாடென + கொடுத்தான் = பாடெனக் கொடுத்தான்
தேடென + சொன்னான் = தேடெனச் சொன்னான்
அவனைவிட + பெரியவன் = அவனைவிடப் பெரியவன்
அதைவிட + சிறியது = அதைவிடச் சிறியது
காணா + காட்சி = காணாக் காட்சி
இல்லா + தாழ்வு = இல்லாத் தாழ்வு
பொல்லா + காலம் = பொல்லாக் காலம்

ஓடா + குதிரை = ஓடாக் குதிரை
பறவா + கிளி = பறவாக் கிளி
தேடா + பொருள் = தேடாப் பொருள்
பொய்யா + கொடுக்கும் = பொய்யாக் கொடுக்கும்
தேடா + சென்றான் = தேடாச் சென்றான்
பலா + பழம் = பலாப்பழம்
கூவா + சேவல் = கூவாச்சேவல்
புறா + கூடு = புறாக்கூடு
இரா + பள்ளிக்கூடம் = இராப் பள்ளிக்கூடம்
சுறா + துண்டம் = சுறாத் துண்டம்
கனா + கண்டான் = கனாக் கண்டான்
இ + செடி = இச்செடி
அப்படி + செய் = அப்படிச் செய்
இப்படி + கூறினான் = இப்படிக் கூறினான்
எப்படி + போனான் = எப்படிப் போனான்
இனி + பேசு = இனிப் பேசு
தனி + குடம் = தனிக் குடம்
தடையின்றி + செய்தான் = தடையின்றிச் செய்தான்
மெய்யன்றி + புகழ்பெறான் = மெய்யன்றிப் புகழ்பெறான்
உப்பின்றி + தின்றான் = உப்பின்றித் தின்றான்
கட்டிக் + கொண்டான் = கட்டிக் கொண்டான்
தேடி + சென்றான் = தேடிச் சென்றான்
கூடி + பேசினான் = கூடிப் பேசினான்
பாதி + துணி = பாதித் துணி
உரி + காய் = உரிக்காய்
நாழி + பழம் = நாழிப்பழம்
கிளி + கூடு = கிளிக் கூடு
கூலி + தொழில் = கூலித் தொழில்
பழி + சொல் = பழிச்சொல்
மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்

பனி + காலம் = பனிக்காலம்

ஈ + கால் = ஈக்கால்

தீ + குணம் = தீக்குணம்

உ + பக்கம் = உப்பக்கம்

அங்கு + போ = அங்குப்போ

இங்கு + செல் = இங்குச்செல்

எங்கு + கண்டாய் = எங்குக் கண்டாய்

ஆங்கு + கேட்டான் = ஆங்குக் கேட்டான்

ஈங்கு + பார்த்தான் = ஈங்குப் பார்த்தான்

யாங்கு + சென்றான் = யாங்குச் சென்றான்

ஆண்டு + சென்றான் = ஆண்டுச் சென்றான்

ஈண்டு + போந்தான் = ஈண்டுப் போந்தான்

யாண்டு + கூறினான் = யாண்டுக் கூறினான்

மற்று + சிறியன் = மற்றுச் சிறியன்

அதற்கு + கொடு = அதற்குக் கொடு

அவனுக்கு + சொல் = அவனுக்குச் சொல்

கொக்கு + கால் = கொக்குக் கால்

கற்று + கொடு = கற்றுக் கொடு

சற்று + பொறு = சற்றுப்பொறு

எட்டு + தலை = எட்டுத் தலை

பத்து + பனை = பத்துப்பனை

திரு + குளம் = திருக்குளம்

திரு + புகழ் = திருப்புகழ்

புது + கோட்டை = புதுக்கோட்டை

நடு + பகல் = நடுப்பகல்

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

இரும்பு + பூண் = இரும்புப்பூண்

அம்பு + தலை = அம்புத்தலை

செம்பு + தண்ணீர் = செம்புத் தண்ணீர்

அரவு + தோல் = அரவுத் தோல்

இரவு + காலம் = இரவுக்காலம்
புறவு + தலை = புறவுத்தலை
பூ + பறி = பூப்பறி
பூ + பூத்தது = பூப்பூத்தது
எ + காலம் = எக்காலம்
ஏ + கடிது = ஏக்கடிது
கை + களிறு = கைக்களிறு
அவ்வகை + செய்தான் = அவ்வகைச் செய்தான்
இவ்வகை + கற்றான் = இவ்வகைக் கற்றான்
எவ்வகை + திருத்தினான் = எவ்வகைத் திருத்தினான்
மற்றை + பொருள் = மற்றைப் பொருள்
அவனைக் + கண்டான் = அவனைக் கண்டான்
என்னை + தேடினான் = என்னைத் தேடினான்
பொருளை + பெற்றான் = பொருளைப் பெற்றான்
நல்லாரிடை + புக்கு = நல்லாரிடைப் புக்கு
மலையிடை + பிறவா = மலையிடைப் பிறவா
அரை + பணம் = அரைப்பணம்
மலை + பாம்பு = மலைப்பாம்பு
தலை + சுமை = தலைச் சுமை
கலை + கோயில் = கலைக்கோயில்
நகை + பெட்டி = நகைப்பெட்டி
சிறை + கூடம் = சிறைக்கூடம்
பறவை + கூடு = பறவைக்கூடு
யானை + கழுத்து = யானைக்கழுத்து
குதிரை + குளம்பு = குதிரைக்குளம்பு
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு
வாழை + பழம் = வாழைப்பழம்
பனை + கை = பனைக்கை
கோடை + காலம் = கோடைக்காலம்

மழை+காலம்=மழைக்காலம்
ஓ + கொடிது = ஒக்கொடிது
அவ்விதம் + கொடுமை = அவ்விதக்கொடுமை
இவ்விதம் + பொறுமை = இவ்விதப் பொறுமை
எவ்விதம் + தீமை = எவ்விதத் தீமை
எல்லாம் + சொற்களும் = எல்லாச் சொற்களும்
எல்லாம் + படியாலும் = எல்லாப்படியாலும்
பணம் + பை = பணப்பை
கமலம் + கண் = கமலக்கண்
மரம் + கட்டில் = மரக்கட்டில்
நிலம் + பனை = நிலப்பனை
அகலம் + துணி = அகலத்துணி
வட்டம் + பலகை = வட்டப் பலகை
குளம் + கரை = குளக்கரை
படம் + காட்சி = படக்காட்சி
நாய் + தலை = நாய்த்தலை
வாய் + பேச்சு = வாய்ப்பேச்சு
போய் + சொல் = போய்ச்சொல்
தயிர் + குடம் = தயிர்க்குடம்
பயிர் + தொழில் = பயிர்த்தொழில்
மயிர் + கம்பளம் = மயிர்க்கம்பளம்
நார் + கட்டில் = நார்க்கட்டில்
நகர் + புறம் = நகர்ப்புறம்
மலர் + சோலை = மலர்ச்சோலை
நீர் + பாம்பு = நீர்ப்பாம்பு
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்
கீழ் + குலம் = கீழ்க்குலம்
கீழ் + காற்று = கீழ்க்காற்று
(கீழ்க்குலம், கீழ்க்காற்று என மிகாமலும் வரும்)

# வல்லெழுத்துக்கள் மிகா இடங்கள்

சில + செல்வம் = சில செல்வம்
பல + குதிரை = பல குதிரை
நல்ல + பாம்பு = நல்ல பாம்பு
கெட்ட + பையன் = கெட்ட பையன்
வந்த + காலம் = வந்த காலம்
பேசின + பேச்சு = பேசின பேச்சு
எழுதின + புத்தகம் = எழுதின புத்தகம்
பாடுகிற + பாட்டு = பாடுகிற பாட்டு
வருகிற + காலம் = வருகிற காலம்
அண்ணா + கொடு = அண்ணா கொடு
அவனா + செய்தான் = அவனா செய்தான்
வாழ்க + கொற்றா = வாழ்க கொற்றா
சென்ற + பூனை = சென்ற பூனை
கரிய + பூனை = கரிய பூனை
வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்
போகும்படி + சொன்னான் = போகும்படி சொன்னான்
(அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்கட்குப் பின் மட்டும் மிகும்)
புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது
புலி + பிடித்தான் = புலி பிடித்தான்
புளி + தின்றான் = புளி தின்றான்
வழி + தேடினான் = வழி தேடினான்
பொன்னி + கணவன் = பொன்னி கணவன்
தம்பீ + போ = தம்பீ போ

அது + நெடிது = அது நெடிது
அது + பெரிது = அது பெரிது
இது + கொடிது = இதுகொடிது
எது + சிறிது = எது சிறிது
எது + பெரிது = எது பெரிது
அடு + களிறு = அடுகளிறு
சுடு + சோறு = சுடு சோறு
ஓடு + குதிரை = ஓடு குதிரை
காது + கேளாது = காது கேளாது
மாடு + சீறாது = மாடு சீறாது
உலகு + பெரிது = உலகு பெரிது
வரகு + சிறிது = வரகு சிறிது
செய்து + கொண்டான் = செய்து கொண்டான்
பெய்து + பார்த்தான் = பெய்து பார்த்தான்
அறிந்து + கொண்டான் = அறிந்து கொண்டான்
தெரிந்து + போனான் = தெரிந்து போனான்
வந்து + சொன்னான் = வந்து சொன்னான்
பங்கு + பிரித்தான் = பங்கு பிரித்தான்
பந்து + பெரிது = பந்து பெரிது
அம்பு + தொடு = அம்பு தொடு
கண்டு + சொல் = கண்டு சொல்
இரவு + கழிந்தது = இரவு கழிந்தது
உறவு + போனது = உறவு போனது
செலவு + செய்தான் = செலவு செய்தான்
வரவு + பார்த்தான் = வரவு பார்த்தான்
அறிவு + பெற்றான் = அறிவு பெற்றான்
கூப்பு + கை = கூப்பு கை
நாட்டு + புகழ் = நாட்டு புகழ்
அன்று + சொன்னான் = அன்று சொன்னான்

இன்று + கண்டான் = இன்று கண்டான்
என்று + தந்தான் = என்று தந்தான்
நன்று + சொன்னாய் = நன்று சொன்னாய்
அவ்வளவு + காலம் = அவ்வளவு காலம்
இவ்வளவு + துணிவு = இவ்வளவு துணிவு
எவ்வளவு + பொறுப்பு = எவ்வளவு பொறுப்பு
அதிலிருந்து + பெற்றான் = அதிலிருந்து பெற்றான்
இதினின்று + செய்தான் = இதினின்று செய்தான்
அவனொடு + போனான் = அவனொடு போனான்
அவனோடு + சேர்ந்தான் = அவனோடு சேர்ந்தான்
பண்ணோடு + பாடினான் = பண்ணோடு பாடினான்
நாடு + சென்றான் = நாடு சென்றான்
கிணறு + மூழ்கினான் = கிணறு மூழ்கினான்
யானை + பெரிது = யானை பெரிது
அத்தனை + செடி = அத்தனை செடி
இத்தனை + சிறுமை = இத்தனை சிறுமை
எத்தனை + பசு = எத்தனை பசு
பிள்ளை + தேடினது = பிள்ளை தேடினது
அவை + பெரியன = அவை பெரியன
பறவை + கொன்றான் = பறவை கொன்றான்
ஔவை + கண் = ஔவை கண்
அதுவோ + போனது = அதுவோ போனது
மண் + பெரிது = மண்பெரிது
கண் + சிறிது = கண் சிறிது
எவர் + பெரியவர் = எவர் பெரியவர்
குளிர் + காலம் = குளிர் காலம்
பயிர் + செய்தான் = பயிர் செய்தான்
நீர் + பாய்ச்சினான் = நீர் பாய்ச்சினான்
நீர் + குடித்தான் = நீர் குடித்தான்

# இணைமொழி சொற்கள்

சிறுவர்+தாய்=சிறுவர் தாய்
அவர்+தலை=அவர் தலை
அகமும்புறமும்
அகலாமல் அணுகாமல்
அடியும் நுனியும்
அடுப்பும் துடுப்பும்
அருமை பெருமை
அல்லும் பகலும்
அறம் மறம்
அன்றிலும் பேடும்
அன்றும் இன்றும்
ஆக்கமும் கேடும்
ஆங்காலம் போங்காலம்
ஆடல் பாடல்
ஆண்டான் அடிமை
ஆய்ந்து ஓய்ந்து
இகழ் புகழ்
இம்மை மறுமை
இயலும் செயலும்
இயற்கையும் செயற்கையும்
இளைத்துக் களைத்து
இறங்குபொழுது ஏறுபொழுது
இன்ப துன்பம்
ஈடும் எடுப்பும்
உடை நடை
உயர்வு தாழ்வு
உயிரும் உடலும்
உருட்டும் புரட்டும்
உருண்டு திரண்டு
உருவும் திருவும்
உள்ளது உரியது
உள்ளதும் இல்லதும்
உள்ளும் புறமும்
உற்றார் உறவினர்
ஊரும் பேரும்
எடுப்பாரும் பிடிப்பாரும்
எண்ணும் எழுத்தும்
எருக்குங் குருக்கும்
எலும்பும் தோலும்
ஏழை எளியவர்

ஏற்றடி இறக்கடி
ஒட்டி உலர்ந்து
ஒப்பாரும் மிக்காரும்
ஒப்பு உயர்வு
கட்டை நெட்டை
கண்டது கேட்டது
கண்டுமுட்டு கேட்டுமுட்டு
கண்ணீரும் கம்பலையும்
கப்பும் கவரும்
கல்லும் கரம்பும்
கல்வி கேள்வி
கற்பும் பொற்பும்
கனவோ நனவோ
காவலரும் ஏவலரும்
காவலரும் பாவலரும்
காலை மாலை
கீழும் மேலும்
குடியும் தடியும்
குணம் குறி
குலமும் குணமும்
குறைவு நிறைவு
குற்றுயிரும் கொலையுயிரும்
கேளும் கிளையும்
கையும் மெய்யும்
கொட்டு முழக்கு
கொண்டு கூட்டு
கொத்தடிமை குடியடிமை
கொப்பும் குழையும்
கொலையும் புலையும்
சட்டி பானை
சந்தி சதுக்கம்
சாக்குப் போக்கு
சாவா மூவா
சீராட்டிப் பாராட்டி
சீரும் சிறப்பும்
சீறிச் சினந்து
சுற்றும் முற்றும்
சொல்லும் பொருளும்
ஞாயிறும் திங்களும்
தடுத்து மடுத்து
தடை விடை
தப்பும் தவறும்
தாயும் சேயும்
தும்பு தூசு
தோட்டம் துரவு
தோலும் எலும்பும்
நகமும் சதையும்
நகை நட்டு
நயமும் பயமும்
நரை திரை
நலம் பொலம்
நல்லார் பொல்லார்

நன்மை தீமை
நாடு நகர்
நாயும் பேயும்
நாளுங் கிழமையும்
நாடும் கோளும்
நிரந்து கலந்து
நுங்கும் நுரையும்
நைந்து பிய்ந்து
நொண்டி சண்டி
நோய் நொம்பலம்
நோவு நொடி
படியாதார் பண்டிதர்
பட்டி தொட்டி
பண்ணும் இசையும்
பயிர் பச்சை
பருந்தும் நிழலும்
பழக்க வழக்கம்
பாலும் தேனும்
பாவமும் பழியும்
பேரும் புகழும்
பொய்யும் புலையும்
பொய்யும் புனைசுருட்டும்
பொய்யும் வழுவும்
போக்குப் புகல்
போக்கும் வரவும்
போற்றிப் புகழ்ந்து
மணியும் ஒளியும்
மண்ணும் விண்ணும்
மண் மனை
மந்திர தந்திரம்
மப்பு மந்தாரம்
மயக்கம் தியக்கம்
மலரும் மணமும்
மலைக்கும் மடுவுக்கும்
முட்டி மோதி
முற்ற முடிய
மேடு பள்ளம்
யாழும் குழலும்
வற்றி வறண்டு
வாடி வதங்கி
வாய்க்கால் வரப்பு
வாழ்வு தாழ்வு
வானகமும் வையகமும்
விதி விலக்கு
விருப்பு வெறுப்பு
வினா விடை
வீடும் விளக்கும்
வேரும் தூரும்